மதுரை மாநாடு வேலைகள் தீவிரம்

ஜுலை 13, 14, 15, 16...

தொண்டர் படை தயார்!

பந்தல் வேலை நடக்கிறது

கண்காட்சி உண்டு

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

16-6-61] :-:] விலை 16 காசு

100 ஏக்கர் பரப்புள்ள திடல்! திருப்பரங்குன்றம் மலை ஒரு எல்லை! மற்ற மூன்று பக்கங்களிலும் வளையம்போல் 6 கண்மாய்கள்—நீர் நிலைகள்!—இவ்வளவு அற்புதமான இடம், மாநிலப் பொதுமாநாட்டுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மதுரையையடுத்த திருப்பரங்குன்றத்தில், வேலைகள் தீவிரமாக நடைபெறுகின்றன

மாநாட்டுப் பிரதிநிதிகளும், பார்வையாளர்களும் தங்குவதற்காக திருப்பரங்குன்றத்திலுள்ள பல விடுதிகள், ஏற்பாடு செய்யப்படுகின்றன. திடலில், மக்களுக்குத் தேவையான தண்ணீர் வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

தொண்டர் படைத் தலைவர்களான பா. சீனிவாசன், S. காதற்கனி ஆகியோரின் மேற்பார்வையில், மாநாட்டுக்கானத் தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். பெண்கள் பகுதிக்கான பெண் தொண்டர்களும், ஏராளமாகப் பணியாற்ற முன்வந்திருக்கிறார்கள்.

வரவேற்புக் குழுத் தலைவர் மதுரை முத்துவும், செயலாளர்களில் ஒருவரான பி. எஸ். மணியன் பி. ஏ. பி. எல்லும், கழகக் கண்மணிகள் நூற்றுக்கணக்கானவர் புடைசூழ, மாநாட்டுக்கான எல்லாப் பணிகளையும் செய்துவருகின்றனர். திடலுக்குள் நுழைந்தால், ஒரே "தலை"யாகயிருக்கிறது! யாரென்று குறிப்பிடுவது?

இப்போதுமுதலே, நகரில் மாநாட்டுக்கான பரபரப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. எங்கும் நமது மாநாட்டைப்பற்றியே பேசுகிறார்கள்!

கடைகாரர்கள்—ஓட்டல்கள்—இப்போதிருந்தே ஆயத்தமாகின்றன!! தங்கும் அறைகளுள்ள பல ஓட்டல்களுக்கு இப்போதிருந்தே, முன்னறிவிப்பு வந்துகொண்டுள்ளதாக, ஒரு ஓட்டல் தொழிலாளி சொன்னார்!

தனி ரயில் வண்டிகளை விடுமாறு மாநாட்டினர் இரயில்வே நிர்வாகத்தினருக்கு எழுதியுள்ளனர். அதுமட்டுமின்றி, பல ஊர்களிலிருந்தும் பஸ்கள் மூலம், வரும் வழியில் கழகத் தேர்தல் நிதி வசூலித்தப்படி மதுரை செல்வார்களென்று தெறிகிறது.

மாநாட்டின் காரியங்கள் எப்படி நடக்கின்றன என்று தலைமை நிலையச் செயலாளர் தோழர் மதியழகன் அவர்கள் வந்து பார்த்துவிட்டுச் சென்றார். விரைவில் பொருளாளர் மு. கருணாநிதியும் ஏனைய தலைவர்களும் வந்து இங்கே தங்குவரெனத் தெரிகிறது,

வாழ்வில் ஒருநாள்! வையம் புகழும் நாள்! உரிமைத் திருநாள்! உன்னத நாள்! நாம் எல்லாம் ஒன்றுகூடும் நாள்! மாற்றாருக்கு நம் வளர்ச்சியைக் காட்டும் நாள்! அண்ணன் தம்பிகள் கலந்துறவாடும் நாள்!!

தாயகத்தோரே! தயாராகுங்கள், மதுரை செல்ல. வழி முழுதும் கழகத்தைப்பற்றி முழக்கி, தேர்தல் நிதி சேர்த்தபடிவர, பஸ்களே நல்லவை. ஏற்பாடு செய்யுங்கள் இருபது முப்பது பேராய்! அப்படிச் செய்வதிலுள்ள இன்பம் வருமோ!!

அறப்போர் தரும் முதல் மலர்

இலட்சியக் காணிக்கை! இலக்கியப் பேழை!

மாநில மாநாட்டு மலர்!

ஜுலை 22ந் தேதி கிடைக்கும்

பக்கங்கள் 20 * விலை ௩|| காசு

விற்பனையாளர்கள் தேவைக்குரிய முன்பணத்தோடு உடன் எழுதுக!



நீங்களும்

திராவிடமா, இல்லை!

"திராவிடத் தாய்" என்று ஒரு நூலை எழுதியுள்ளார், தேவநேயப்பாவாணர் அவர்கள்!

தெக்கணமும், அதிற் சிறந்த திராவிட நற்றிரு நாடும் என்று மனோன்மணியத்தில் குறிப்பிடுகிறார், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள்.

சிவஞான சுவாமிகள்' "திராவிடமாபாடியம்" என்று ஒரு நூலை எழுதியுள்ளார். சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள், திராவிடம் என்ற சொல்லைப்பற்றி ஆராய்ச்சி செய்துகாட்டுகிறார்,

ஆதிசங்கரர் அவர்கள், ஞானசம்பந்தரை திராவிட சிசு என்றே அழைத்தாராம். மனுஸ்மிருதியில் பத்தாவது பிரிவில் ஒட்டரர் திராவிடர், காம்போஜர் என குறிப்பிடுவதை வடமொழி கற்ற ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனராம். 'திராவிட உத்கலவங்கா என்று தேசியப் பாடலில் வங்கக் கவிஞர் தாகூர் இச்சொல்லைக் கையாளுகிறார்.

டாக்டர் கால்டுவெல்துரை மகனார், தாயுமானவர் இவர்களுடைய உள்ளத்திலும் திராவிடம் என்ற சொல் பதிந்துயிருக்கிறது.

ஆரம்பப்பாடசாலை முதல், பல்கலைக்கழகம் வரையுள்ள சரித்திர, சமூகப் பாடங்களில் திராவிட நாகரிகம் பரக்கக் காணப்படுகிறது.

இத்தகைய சரித்திரச் சான்றுகளையும், மேலே காட்டியுள்ளவர்கள் தங்களுடைய தூய்மையான நாவால் திராவிடம் என்ற சொல்லை பாட்டு மூலமாகவும் நூலின் மூலமாகவும் வெளியிட்டிருக்கின்றார்கள். இத்தகைய ஆதாரங்களை நாம் வைத்து கேட்கின்றோம் திராவிடநாடு. நம்மைப் பார்த்து, மதிப்பிற்குரிய நமது பழைய நண்பர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் திராவிடம் என்பது கற்பனையில் உருவானது—அது கானல் நீர்—அது ஒரு சூன்யம்—அது ஒரு மாயை என்றெல்லாம் மக்களிடத்தில் பேசி வருகிறாரே, அவரை எப்படி அழைப்பது இதற்குப் பொருள்தான் என்ன?

ஆ. தங்கமணி,
செங்கமேடு.

* * *

பொருட்படுத்தினர்களா அதை!

"திராவிடமாவது, வெங்காயமாவது, எல்லாம் வெறும் பித்தலாட்டம். பொறுக்கித் தின்னத்தான் அந்தத் தத்துவத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை—அல்ல — அல்ல கண்ணீர்த் துளிக்கட்சியை எப்படியும் ஒழித்தேத் தீருவேன்! இதோ என் படை வீரர்கள், இதோ பக்கத்திலே காமராசரின் ரத கஜ துரகபதாதிகள்" என்று தள்ளாத வயதிலும் ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்தார், நாமெல்லாம் தந்தை என்று நம்பியிருந்த பெரியார் ஈ. வே. ரா. அவர்கள். 'பார்ப்பனர்களை வெட்டு, குத்து. இதோ கத்தி, இதோ பெட்ரோல் டின், அதோ தீப்பெட்டி, எங்கே அக்கிரகாரம்' என்றவர், பார்ப்பனனுக்கு சவரம் செய்ய நம்மின மக்கள் செல்லக் கூடாது என்றவர், அவர்களை சட்ட சபைக்கும், பாராளுமன்றத்திற்கும் அனுப்ப துடியாகத் துடித்து, இரவென்றும் பகலென்றும் பாராமல் காஞ்சீபுரத்திலும், சென்னையிலும் தேர்தல் பிரச்சாரத்திலீடுபட்டதை மக்கள் கண்டனர். வயதிற்கு மதிப்பளித்தனர். அவருடைய சொல்லை துச்சமென மதித்தனர். திராவிடர் கழகம் இன்று 'விடுதலை' யோடு சரி. அறிஞர்பெருமானையோ, தி. மு. கழகத்தையோ அசைக்கக்கூட முடியவில்லை. 'ஏன்தான் திராவிடர் கழகம் நாட்டிலே அந்தப் பெயரோடு நடமாடுகிறதோ தெரியவில்லை, எல்லோரும் காங்கிரசோடு கூண்டாகச் சேர்ந்துவிட்டால் என்ன' என்று நாட்டு மக்கள் கூறக்கூடிய அளவில் நிலைமை இன்று இருக்கிறது.

மேற்கண்ட இவர்கள் அத்தனை பேரும் முயன்று தோற்ற ஒன்றைப்பிடித்துக்கொண்டு இன்று புதுக் கட்சி அமைத்துள்ள புனிதர்கள் புறப்பட்டுவிட்டனர். பொதுவாகக்கவிஞர்களே பைத்தியக்காரர்கள் எனக் கூறப்படுவதுண்டு. கற்பனை உலகில் அவர்கள் நடமாட ஆரம்பித்துவிட்டால் உண்மை உலகிற்குவர நெடு நேரமாகுமாம்.

இந்தக் கூற்றில் யாருக்காவது ஐயம் தோன்றிடின், அவர்கள் புதுக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான-மன்னிக்கவும் அமைப்பாளர்களில் ஒருவரான—மறுபடியும் மன்னிக்கவும்—ஆயுள் முழுவதும் தலைவர் பக்கத்திலே நண்பராக இருந்துகொண்டு தேசியத்திற்கு வெறும் அனுதாபியாகவே இருக்க முடிவுசெய்துவிட்ட கண்ணதாசனாரை ஒருமுறை பாருங்கள் போதும்!

மேடையேறிவிட்டால் என்ன பேசுவது எதைப் பேசுவது என்ற வரைமுறையில்லாது பேசுவது அவருடைய வாடிக்கை. இன்று நேற்றல்ல பன்னெடும் காலமாகவே.

'ஆழக் குழி தோண்டி நீளப் புதைக்க வேண்டும்' என்ற சொற்றொடரை அவர் காங்கிரசுக்குப் பயன் படுத்தினார் பல முறை. கம்யூனிஸ்டு கட்சிக்கும் பயன் படுத்தியிருக்கிறார் அடிக்கடி. தமிழரசுக் கழகம், திராவிடக் கழகம், நாம் தமிழர் கட்சி இவைகளையும் அந்தச் சொற்றொடர் விட்டுவைக்கவில்லை. கடைசியாக நம்மிடமே வந்துவிட்டார், வெட்டியான் வேலை செய்ய.

"வெந்ததைத் தின்று வாயில் வந்ததைப் பேசுவது" என்பது அறிஞர் பெருமானால், வேறு ஒரு சந்தர்ப்பத்தில் வேறு ஒருவருக்காக பயன்படுத்தப்பட்ட சொல். அதைத்தான் நாம் இப்புலவருக்கும் பொருத்திப் பார்க்கவேண்டியுள்ளது.

கடந்த தேர்தல் முடிந்தவுடன் ஊர் ஊராகச் சென்றார், எல்லா மேடைகளிலும் முழங்கினார், காங்கிரசை ஒழிப்பது பிறகாகட்டும்—முதலில் ஒழிக்கப்படவேண்டியது கம்யூனிஸ்டும் திராவிடக் கழகமுமே என்று. பின்னர் சுதியை மாற்றி காங்கிரஸ் கருங்காலிகளைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டுமென்றார். கடைசியில் இப்போது புதுக்கட்சி கண்ட மோகத்தில் தி. மு, கவை ஒழிப்பதுதான் என் முதல் வேலை என்கிறார்.

அவருடைய பேச்சுக்களை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை. காரணம் அவர் எதையும் உணர்ந்து பேசினதாக அவருடைய கடந்தகால வரலாறு காட்டவில்லை. சொல்வதை செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியும் அவரிடம் இருந்ததில்லை. "கலை இல்லாத மனிதன்" கை வெளிவந்தாரே தவிர. தேர்தலுக்கென்று இரண்டு படம் எடுப்பேன் எனக் கூறினதை. கூறினமறுவிநாடியே மறந்துவிட்டதையும் நாம் மறைப்பதற்கில்லை.

உணர்ச்சி வேகத்தில் இலங்கைக்கு இங்கிருந்து தி. மு. கழகம் படை அனுப்பும் என்று பேசிய பேச்சினை எவராவது அரசியல் தெரிந்தவர்கள் பொருட்படுத்தி இருப்பார்களா? காங்கிரசுக்காரர்கள் தில்லுமுல்லு செய்தால் 'போலிங் பூத்தை' கொளுத்துவேன் என்று மேடையிலே முழங்கினாரே, இந்நாள் தேசியத்தார், நடக்கக்கூடியதையா சொன்னார். யாராவது பொருட்படுத்தினர்களா அதை!

தமிழ்மன்னன்.
பூனா

* * *

இடிக்க இவர் யார்!

பன்னிரண்டு ஆண்டுகள் நம்முடைய இயக்க வரலாற்றிலே, நாம் பட்ட இன்னல்கள் பலப்பல! முதலாண்டு முடியுமுன்னேயே அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்குச் சிறை! ஆரிய மாயை நூல் தடை உடைக்க மக்கள் திரண்டு நிரப்பியக்காட்சி! இப்படி ஆரம்பித்து இடையிலே கல்லடி—சொல்லடி—இழிமொழி—வன்செயல்—கழகத் தோழர்களைத் தாக்கினோர்—கொடிகளைக் கொளுத்தினோர்—கம்பங்களை வெட்டி சாய்த்தோர்—"இவர்களைப் பற்றி எழுதுவதே பாவம்" என்றிருந்த 'தேசீய ஏடுகள்' ஏராளம். நாம் கொட்டிக்கொடுத்தக் குருதி—இழந்த உறுப்புகள்—உடைந்த மண்டைகள்—தியாக பரம்பரையினர் பிணங்கள் மண்ணிலே சாய்ந்தன பல! இப்படிக் கொட்டிய குருதிதான் நம்முடைய கொடிக்கு சிவப்பு நிறத்திற்கு மேலும் சிவப்பேற்றிற்று! மறைத்த ஏடுகள் எழுதினால்தான் வயிறு வளர்க்க முடியும் என்ற நிலைக்கு வருமளவுக்கு கழகக கொள்கைகள் நாளும் முழங்கின எங்கெங்கும்!

ஆள்பலம் நம்மை ஆளாக்கவில்லை—பண பலம் பக்கமே வரவில்லை—பத்திரிகை பலம் தவழும் குழந்தைப் பருவம் இருந்தும், நாம் வளர்ந்தோம்—வளர்கிறோம் என்றால் காரணம் அதனைச் சார்ந்துள்ள கொள்கை பலமேயாகும்! இத்துணைக் கண்டத்து அரசியலில் எதனோடு இணையாமலும் பலரின் பேச்சுக்கும்--ஏச்சுக்கும்--தொல்லைக்கும்--துயரங்களுக்கும் இடையே சுயபலத்தோடு சுதந்திர நடைபோடும் ஒரே கட்சி நமது கழகமாகும்!

17---1--60 ல் உதகையில் பேசிய புதுக் கட்சித் தலைவர் சம்பத் அவர்கள் இதனைத்தான் குறிப்பிட்டார் "கழகம் வளர்கிறதென்றால் அது ஆள் பலத்தாலல்ல கொள்கை பலத்தால்" என்பதாக! இன்று பிரிந்து சென்றோர் நினைவில் வைத்திடவேண்டும் போவதால் கழகம் அழியாது—காரணம் கொள்கை பலமுண்டு!

வீடு கட்டிட் உரிமையுண்டே தவிர, இடித்திட யாரும இடம் தரார்! நடவடிக்கை எடுத்து நல்லவை போதிப்பர்-அதுபோலவே கழகம் கட்டிக்காத்தோர் கலைத்திட முயன்றால் மக்கள் என்ன ஏமாளிகளா?

தி. ஜெயராமன்
செயலாளர், நகர, தி. மு.க.
உதகை

நானும்

அறப்போர்

60,00,000 பேர்களைக் கொன்ற காதகன்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மூளை சிதறிய குழந்தையு , கதறிய தாயுமே என் கவனத்திலிருந்தனர்! பெர்லினுக்குப் போய்ச் சேர்ந்த அந்த 12 மணி நேரமும், கூட வந்தவர்களிடம், நான் எதுவுமே பேச வில்லை. நான் காட்டிய அமைதி, என்னுடைய அதிகாரிகளுக்கு ஆச்சரியமாயிருந்திருக்க வேண்டும். நாங்கள் பாடுபட்ட தேசிய உணர்ச்சி தீதானது என்பதால், நான் மௌனியாகவில்லை. தீது என்று இப்போதும் நான் எண்ணவில்லை. பொதுவாக வாழ்க்கையின் விசித்திரங்களைப் பற்றியே, யோசித்துக் கொண்டிருந்தேன்.

பார்த்திரோ! பாலகன் பயந்து நிற்பதை!!

ஜெனரல் முல்லரைச் சந்தித்த போது, "யூதர்கள் பிரச்னையை அரசியல் மூலம் தீர்க்க எண்ணினோம். இப்போது, அவர்களையே தீர்க்கும் கட்டத்துக்கு வந்துவிட்டோம். இதை சரிவரச் செய்ய, நாம் மின்ஸில் கையாளும் முறை சரியில்லை: இதே பயங்கரத்தை எத்தனை நாட்களுக்கு நமது இராணுவ வீரர்கள் செய்ய முடியும்? அவர்கள் மனதிலும், குழந்தைகள், பெண்கள் முதலியோரைப் பற்றிய பச்சாதாபம் உருவாகாது என்று எப்படி உறுதியாக நம்பமுடியும்? நிராயுதபாணியான யூதப் பெண்களின் மூளையை நோக்கிச் சுடுவதன்மூலம் இந்தப் பிரச்னைக்கு எப்படி நாம் ஒரு முடிவு காண முடியும்?" என்றேன். முல்லர், என்னை பார்த்தார். பதில் ஒன்றும் பேசவில்லை. பயந்த மகனைத் தைரியமூட்டுந் தந்தையின் பார்வை, அவர் பார்த்தபோது இருந்தது.

எனக்கு நெஞ்சுரம் இன்னும் ஏற்படவேண்டும் என்று நினைத்தோ என்னவோ மத்திய போலந்திலிருந்த லாட்ஸ் எனுமிடத்திற்கு என்னைப் போய் வரச் சொன்னர்! இப்போது, நச்சுவாயு மூலம் கொல்கிற ஏற்பாட்டின்படி காரியங்கள் நடந்து கொண்டிருந்தன. இது சரியாக நடக்கிறா

ஆஸ்ட்விச்சில் யூதமாதர்

என்பதைக் கணகாணித்துவர அனுப்பினர். இந்த ஊருக்குப் போய்ச்சேர்ந்ததும், ஆயிரகணக்கான யூதர்கள் லாரிகளில் ஏற்றப்படுவதற்குத் தயாராகயிருந்தனர்! லாரிகளின் சகல பாகமும் —டிரைவர் இருப்பிடப தவிர— மூடப்பட்டிருந்தன. கார்பன் மோனுக்சைட்டைக் கொண்டு தயாரிக்கப்பட்டக் காற்றை பைப்புகள் மூலம் உள்ளேவிட்டு, அடைக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்! லின்சைப் போலின்றி, யாருக்குந் தெரியாமல், யூதர்களை உடனே மரணமடையும்படிச் செய்யும் முறை இது!! ஒரு விதத்தில், இது நல்ல முறையாகவே யிருந்தது. பயங்கரங்களை முன்பு போல நாங்கள் பார்க்கவேண்டிய அவசியமில்லையன்றோ? சவக்குழிகள் வெட்டப் பட்ட இடத்திற்கு இந்த பஸ்கள் போய்ச் சேர பதினைந்து நிமிடமாகும்! ஆனல் லாரி கிளம்பிய மூன்று நிமிடங்களுக்கெல்லாம் உள்ளே அடைக்கபட்ட யூதர்கள் துடித்துத் துவண்டு அலறி அழுது, பிணமாகி விடுவார்கள்!! பிணங்களைக் கொண்டு கொட்டப்படும் இடத்துக்கு போனேன். லாரிகளின் பின்பகுதி திறக்கப்பட்டதும், பொத பொதவென்று பிணங்கள் விழுந்தன. கொஞ்சம் கண்ருவியாகத்தான் இருந்தது, காண்பதற்கு ஒருவன் விழுந்த பிணங்களை ஒவ்வொன்ருக எடுத்துப் போட்டுக் கொண்டே போனுன். அவனுக்கு அடுத்தபடியாக ஒருவன், அர்தப் பிணங்களின் வாயைத் திறந்துவைத்து விட்டுப்போனுன். அவனுக்கடுத்தபடி போனஒருவன், கையிலிருந்த குறட்டால், அந்த பிணங்களின் வாயிலில் தங்கத்தால் கட்டப்பட்ட பற்கள் ஏதாயினும் இருந்தால் அதை பிடுங்கிப் -டுங்கிக் கையிலிருந்த பைக்குள் போட்டுக் கொண்டான்! அந்தத் தங்க பற்கள், பேர்லினிலிருந்த ஜேர்மானிய அரசின் பாங்கிக்கு அனுப்பப்பட்டன!!

எப்படி நடக்கிறது என்பதை நான் ஜெனரல் முல்லருக்குச் சொன்னபோது, கடிகாரத்தை வைத்துக்கொண்டு இதெல்லாம் நடக்க எவ்வளவு நேரமாகிறது என்று பார்த்து வந்திருக்கக் கூடாதா என்ருர். யூதர்களின் பிரச்னைக்கு ஒரு முடிவு காண விரும்பியவன்தான் நான்! என்ருலும். இந்த முறைகளைக் கண்ணுரக் காணும்போது, எனக்கே என்னமோ போலிருந்தது!! ஒரு முறை பேர்லினில் விமான படையெடுப்பு நடந்த பாது, இடிந்து விழுந்த ஒரு கட்டிடத்தினடியில், ஒரு கிழவனும் கிழவியும் சிக்கிக் கொண்டு அலறினர். அவர்களைப் பலமாக ஒரு இரும்புக் கர்டர் தாக்கிப் புதைத்திருந்தது.

"ஐயோ! இந்த வேதனையைத் தாங்க முடியவில்லை. அய்யா! அய்யா! எங்களைச் சுடுங்களேன், சுடுங்களேன்," என்று அவர்கள் கதறினுர்கள். அவர்களை, காப்பாற்ற முடியாது. இன்னும் கொஞ்சம் நேரம் வேதனைப்பட்டு சாகப் போகிற அவர்களைச் சுட்டுக் கொள்வதன் மூலம், அந்த வேதனையில்லாமல் செய்யலாம். ஆனல்' எனக்கு மன தைரியம் வரவில்லை! அவர்கள் என்னைப் போன்ற ஜெர்மானியர்கள்!! என் பின்னே வந்த ஒரு சாதாரண சோல்ஜரை விட்டு அவர்களைச் சுடும்படிச் சொன்னேன். யூதர்களுடைய பிண மலையைக் காணும்போது, தவித்த அந்த ஜெர்மானியக் கிழவன் கிழவியின் நினைவு, எனக்கு வருவதுண்டு!!

பிறகுதான் ஆஸ்ச்விட்ச் என்கிற இடம் நிர்மாணிக்கப்பட்டது. இங்குதான் நச்சுவாயு அறைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த ஊருக்கு நான் அடிக்கடி போவேன். அப்பப்பா! இப்போது நினைத்தாலும், அந்த நாற்றம், மூக்கை வந்து துளைப்பது போலிருக்கிறது!! 25 லட்சம் யூதர்கள் இங்கே அடைக்சப்பட்டார்கள். காடுகள்நிறைந்த ஆஸ்ட்விச்சில், பலபேர், எங்களிடமிருந்து தப்பியும் இருக்க வேண்டும். இப்போதுகூட பலபேர், நல்லஉடல்நிலையோடு, உயிரோடிருக்கிருர்கள். இங்கேதான் தீர்த்துக் கட்டப்படும் 'காம்ப்'கள் அமைக்கப்பட்டன! இங்குதான் நான் "கெட்டோமுறை"யை மேற்கொண்டேன். அதாவது, ஒரு அறை அல்லது கம்பி வேலி போட்டுத் தடுக்கப்பட்ட ஒரு சிறு இடத்தில் யூதர்களை விட்டு விடுவது. அவர்கள் அந்த இடத்தை விட்டு, வெளியே வரமுடியாது. இப்படித் தனித் தனியாக, எல்லா யூதர்களையும் சேகரித்து, ஒரே இடத்தில் வைத்தோம்! இங்கிருந்து கொஞ்சங் கொஞ்சமாகத் தினசரி, தீர்த்துக் கட்டிக் கொண்டிருந்தோம்!

1942-ல் வார்சாவில் இவ்விதம் நாங்கள் அமைத்திருந்த கெட்டோவில், எல்லா யூதர்களும் சேர்ந்துகொண்டு கிளர்ச்சி செய்தார்கள். ஜெர்மன் வீரர்களையெல்லாம் எதிர்த்து அவர்கள் செய்த கிளர்ச்சி, புகைப்படம் பிடிக்கப்பட்டு, எனக்கு அனுப்பப்பட்டன அந்த 'ஆல்பம்' என் மேசையின் மீதுஎப்போதும் இருந்தது அடாடா! எவ்வளவு வெறியோடு யூதர்கள் கிளர்ந்தெழுந்தனர், தெரியுமா!! இதையொட்டி எங்களுக்கேற்பட்ட ஆத்திரத்தால் போலந்தில் ஒரு யூதன் இல்லாமல் செய்தோம்.

இதற்கு முன்பு 'கெட்டோ'வில் அடைபட்டிருந்த யூதர்களை, ஓட்டுக் கொண்டுபோய், ஆலைகளிலும் வயல்களிலும் தினசரிவேலை செய்யச் சொல்லி, மீண்டும்மாலையில் கொண்டுவந்து சேர்ப்போம்! இப்போது, அந்தச் சுதந்திரத்தையும், யூதர்களுக்கு அளிக்க, நாங்கள் விரும்பவில்லை அதுமட்டுமின்றி, வார்சா யூதர்கள் செய்த கிளர்ச்சியைப்பற்றி, எங்கள் வசமிருந்த எல்லா நாடுகளுக்கும் தெரிவித்தோம்! அந்தந்த நாடுகளிலிருந்த என்னுடைய பிரதிநிதிகளுக்கு, யூதர்களைத் திரட்டுவது, இதனல் எளிதாயிற்று. எப்படியொரு கடைக்காரன் ஒரு செய்தியைக்காட்டித்தன்சரக்கை விற்பானே அதே போல "வார்சா காட்சியை" விவரித்தோம். வேலையைச் சுலபமாக்கினேம்!! அங்கேரியிலிருந்த யூதர்கள், போரின் கொடுமையேதும் தங்களை

(10-ம் பக்கம் காண்க)

காசா லேசா!

'நான் என்ன செய்வேன்? கைநீட்டிப் பணம் வாங்கியது உண்மைதான். ஆனால், கடனை அடைக்க வழியில்லை. இந்த அவமானத்துடன் ஊருக்குள் எப்படி உலவுவேன். கடன்காரன்-வாங்கிய பணத்தை கொடாதவன் பணத்தை வாய்க்கரிசிப் போட்டுக் கொண்டவன் என்று ஊர் தூற்றுமே. இதைக் கேட்பதைவிட, இந்த உயிரை மாய்த்துக்கொள்வது மேல்! மானம் பெரிதே ஒழிய வாங்கிய கடனைக் கொடாத வாழ்வு ஒரு வாழ்வா!!'' என்று சீமானிடம் கடன்பட்ட ஏழை, தூக்குக் கயிற்றிலே பிணமாகத் தொங்கிய காட்சியை "வேலைக்காரி'' படத்திலே நீங்கள் கண்டிருக்கலாம்!!

* * *

"இதிலே மானம் என்ன பிரதர் இருக்கு போறதுக்கு? அந்தக் கம்பெனி, இந்தக் கம்பெனி, நான் அதைச் செய்வேன் இதைச் செய்வேன் என்று இரண்டு "டுப்'' விட்டு விட்டு,நம்பி யாராவதுபணம்கொடுத்தால் எடுத்துக் கொண்டு கம்பிநீட்டி விடலாம் பிரதர்! காசா! லேசா!ஆன வரைக்கும் பார்ப்போம் பிரதர். ஆரம்பி, நம் கம்பெனியை!''என்று அடாவடித்தனம் செய்யும், ஜாலி மைனரை நீங்கள் பார்த்திருப்பீர்கள் "இலட்சுமி காந்தன்'' நாடகத்தில்!!

* * *

"யாரடா அவன்? காத்தானா! எங்கேடா வந்தே, காலும் அரையுமா என்னிடம் கொடுத்த பணத்தை வாங்கிட்டுப் போகவா. கொடுக்க முடியாதுடா! முடியாதுன்னா முடியாதுதான்!! உன்கிட்ட வாங்கின பணத்துக்கு நான் ஒன்னும் ரசீது கைச்சீட்டு தரலே தெரியுமில்லே. தைரியமிருந்தா போ, கோர்ட்டுக்கு! கேஸ் போட்டு வாங்கிக்க!!''— இப்படிக்கூறும் பெரிய மனிதர்களையோ, நீங்கள் பல ஊர்களிலே கண்டிருக்கலாம்!!

* * *

வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாத ஏழை. வருந்தி வருந்திச் சாவான்! முகத்தில் முக்காடுப் போட்டுக் கொண்டு யார்முகத்திலும்விழிக்க நாணுவான்! வேதனைப்படுவான்! வேவான்! சாவான்!! பணத்தைச் சுருட்டி நல்லவன்போல் வேடம் போட்டு, அகப்பட்டவரைக்கும் அடித்துக்கொண்டு, துளியும்அச்சமோ பயமோ இன்றிச் செல்வான் சமூகப் புல்லுருவி! ஏழையைப்போன்ற இதயம் இவனுக்கில்லையென்றாலும், வாழ முடியாத வறுமை உண்டாக்கிய தொழு நோய்களில் ஒன்று என்று தள்ளிவிடலாம்.

மாடி வீடு உண்டு, மவுசு உண்டு, ஏறிடக் கார் உண்டு, என்ன கேட்டாலும் கிடைக்க வசதியுண்டு, பெருமானமுண்டு, குடும்ப அந்தஸ்து உண்டு, கூடிடச் சீமான்கள் உண்டு, ஆடிட ஆட்சி அதிகாரம் உண்டு, அப்பன் முப்பாட்டான் பெருமையுண்டு, அதட்டி மிரட்டிட செல்வாக்குண்டு—என்கிற ஒரே காரணத்தினால், ஏழை சேர்த்துக் கொடுத்த பணத்தை எடுத்துக் கொண்டு, "ஏடா! போடா!! பாரடா கோர்ட்டில்!!'' என்று

வண்டு

உறுமும், பெரிய மனிதரைப்பற்றி நாம் என்ன சொல்ல முடியும். பிரபுக்கள் இப்படித்தான்-இதுதான் 'பூர்ஷ்வா'க்குணம் என்போம்! கடனை அடைக்க முடியாமல் நாணயம் போயிற்றே என்று ஏங்கிச் சாகும் ஏழை—வாழ வழியில்லாததால் தவறான வழி செல்லும் தகாதவன்—இரும்பு பேழையிலிருக்கும் பணத்தோடு பணம் சேர்க்க ஏழை கொடுத்ததையும் இருகையேந்தி வாங்கிபூட்டிவிட்டு "ஆமாண்டா! கொடுத்த அதென்னமோ 'சுமாரா' கொஞ்சம் ரூபாயிருக்கும்! அதுக்கென்ன இப்போ? நோட்டா? பெண் கலியாணத்துக் கென்றுதானே என்னிடம்கொடுத்தே.உன் பெண்ணுக்குக் கலியாணம் செய்ய எனக்குத் தெரியும். என்னடா முறைக்கிறே! போ! போய்க் கோர்ட்டில் கேசு போட்டுவாங்கிக் கொள்'' என்று கொக்கரிக்கும் "பூர்ஷ்வாவை'' என்னபெயரிட்டு அழைப்பீர்கள்!!

அன்பர்கள், அவசரப்பட்டு, எந்தப் பெயரிட்டும் அழைத்து விடாதீர்கள்—உண்மையில் இத்தகைய நெஞ்சுரம் தோழர் ஈ. வெ கி. சம்பத்துக்கு இருந்ததை, இத்தனை நாளும் எப்படி மறைத்துக் கொண்டார் என்றே, ஆச்சரியப் படுகிறேன். இந்த கிழமை குமாரபாளையத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கொக்கரித்தாராம்'

"நாங்கள் பணத்தை கொண்டு வந்து விட்டோமெனறால் தி.மு. கழகத்தினர் அதுபற்றி மேடையில் பேசவேண்டிதில்லை!'' என்று. இவர் யார்? தி. மு. கழகத்தினர் பேசவேண்டியதில்லை?—உத்தரவு போட இவர் யார்? என்பது ஒரு புறமிருக்க, கழகத்தைவிட்டுப் போன 411 பேரும் கழக நிதியை கொண்டு போய் விட்டார்கள் என்று நாம் சொல்வது போல் "நாங்கள்'' என்று கூறியிருக்கிறார்! இவருடைய உறுப்பினரில்லாத ஆதரவாளர் கண்ணதாசன் மீதுகூட நாம் இந்தக் குற்றத்தைச் சுமத்தவில்லை! "ஐயோ, பாவம் ஆர். எஸ். பாண்டியன் மீதுகூட நாம் இந்தக் குற்றச்சாட்டை வீசவில்லை! அப்பாவி இளங்கோ அடித்தார் டிக்கட்—வசூலித்தார் பணம்—என்றுநாய் வாய்வலிக்கக் கூறவில்லை! அந்தளவக்கு, நம்மைவிட்டுப் போய் விட்டகாரணத்தினால்நாய்க்குணம் கொள்ளும் ரகமல்ல நாம். இல்லாததைச் சொல்லி, 'எட்டு நாளில்' இவர் தம் எற்றத்தை முட்டி முறித்து விடுகிறேன் என்று நாம் யாரிடமும் 'அட்வான்ஸ்' வாங்கி விடவில்லை. அழுக்கை அள்ளி தெளித்து அதன்வாயிலாகவயிறு கழுவ வேண்டிய அரசியலல்ல நம்முடையது! வீண் பழி சுமத்தி அதன் மூலம் வெண்சாமரம் வீசப்படும் வாழ்வை அனுபவிக்க வேண்டுமென்கிற அவசியமுமில்லை ,நமக்கு. ஆனாலும்,தோழர் சம்பத் அவர்களையும் இழுத்துக் கொள்வோமென்று "நாங்கள்'' போடுகிறார், நாங்கள்! நாம் கேட்பது தோழர் சம்பத் வசம் இருந்த கழக பணத்தையே. அவரும் மறுக்கவில்லை. கோவையில் பேசிய கூட்டம் ஒன்றில்"சுமார்'' 9000 ரூபாயிருக்கும் என்றார். சந்தேகத்துடன் சம்பத்! இதைக் கேட்டோம் — திகைத்தோம். பிறகு தெம்புமடைந்தோம், நல்லவேளையாக இந்தளவுக்காவது ஒத்துக் கொண்டாரே என்று. அவர் சொல்கின்ற தொகை, ஊரை ஏமாற்றும் இலட்சுமிகாந்தனுகிச் சேர்த்துக் கொடுத்தது அல்ல! கழகம் கேட்கிறதே என்பதற்காக கடன் வாங்கி பிறர் அனுப்பி வைத்த பணம்! மானம் பெரிது என்று வாழும் மறக்குடி மக்கள் நாலணா எட்டணாவாகத் தந்த பணம்(ஏழை எளியவர்கள் தந்த பணம்! எண்ணெயிலாத தலை தானே-பரவாயில்லை - எண்ணெய வாங்குகிற காசையும் இந்தி எதிர்ப்புக்குக்கொடுப்போம்என்று தந்த பணம்! சென்னையில் மாநாடாமே, செல்வோம் என்றுமனைவியின் காதுக் கம்மலை அடகு வைத்துவிட்டு ரயிலேறிவந்து கழகத்தின் பால் தமக்குள்ள அன்பைக் காட்டியோர், அளித்த பணம்! அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு போகத்தானா, கணக்குக் காட்டாமல் காலதாமதம் செய்தது? பணத்தைக் கொண்டு போக வேண்டுமென்று திட்டம்ஏற்கனவே திட்டப்பட்டு விட்டதால் தானா, மாநாட்டுக்கென்று எந்தக் கமிட்டியும் வேண்டாமென்று தலைமை நிலையத்திலிருந்த பணத்தைமாநாட்டுச்செலவுக்கென்று வாங்கிக்கொண்டு போனது?—என்கிற கேள்விகள் இப்போதல்ல வேலூர் பொதுக்குழுவிலேயே கிளம்பியது! தோழர் சம்பததுமட்டும் செயற்குழுவிலிருந்து அப்படியே போய்விடாமல் பொதுக் குழுவுக்கும் வந்திருப்பாரேயானால் இந்தக் கேள்விக்கு அ றேபதில் சொல்ல வேண்டிய அவசியம் வந்திருக்கும்!! கழக பொருளாளர் கருணாநிதி கணக்கு ஒப்படைத்த போது ஆந்திரத் தோழர் நரசிம்மலு பதறி எழுந்து கேட்டார், "அன்புள்ள பொருளாளரே! தேர்தல் நிதிக்கெனத் தோழர் சம்பத் வசம் 1050 கொடுத்தோமே ஏன் கணக்கில் வரவில்லை?'' என்று சென்னைத் தோழர் வி. எஸ். கோவிந்தராசன்வெகுண்டெழுந்து வினவினார். "இந்தி எதிர்ப்பு மாநாட்டு மிச்ச பணம் எங்கே கணக்கில்?'' என்று.

அந்த பொதுக் குழுவில் கிளம்பிய அபாண்டத்தை மறைக்கவே அவர் "வன்செயல் கோஷம் போடலானார்! எங்கே இது வெளியில் பரவி விடுமோ என்றஞ்சி எல்லோருடைய கவனததையும் திருப்ப, ஏடுகளுக்கு"வன்செயல்! வனசெயல!!'' என்று அறிக்கைகள் கொடுத்தார்!! அப்போதே, சென்னையிலுள்ள பல தோழர் குமுறினார்கள்.

'அதெல்லாம் கிடக்கட்டுமய்யா என்னசொல்கிறாய் இந்தி எதிர்ப்பு

(9-ம் பக்கம் பார்க்க)

அடுத்த இதழ்!

'காஞ்சி மலராக'

படங்களோடு வரும்.

* * *

புதன் கிழமைக்குள், விற்பனையாளர்கள், அதிகப் பிரதிகளுக்கு முன் பணத்தோடு எழுதுக...

பொறுப்பாளர்:—
"அறப்போர்'' சென்னை-24.

சிறந்த நாவல் புத்தகங்கள்!

சிலம்புச் செல்வி	2--00
காதல் ஜனிப்பது எங்காக	1--50
விபரீத மனிதன்	1--50
அறுவடை	1--25
ஸ்வர்க்கம்	1--00
இன்பவாழ்விற்கு இதுதான்வழி	1--00
டைப்பிஸ்ட் ஜானசி	0--75

தேவைக்கு எம். ஒ. செய்தால், தபால் செலவு இல்லாமல் அனுப்பப்படும். வியாபாரிகளுக்கு தக்க கழிவு உண்டு.

ஜெயம் அண் கம்பெனி,
6-சீரீராமர் பேட்டை
சென்னை-15

ஈரோட்டு இளவலின் மூலநோக்கம்!

தந்தையைச் சமாதானப்படுத்துவதே !!

கொள்கையிலாக் குழப்பக் கட்சி

ஒரு ஆள்,

சவால் விடுகிருர்—போர் முரசு கொட்டுகிருர்—

என்ருல், அந்த ஆளுக்கு யாரோ எதிரி, முன்னல் நிற்கிருன் என்று தான் எவரும் நினைப்பார்கள்.

எதிரில் எதிரியே இல்லாத போது, ஒரு ஆள் வேகமாகச் சவால் விடுகிருர் —சண்டைக்கு புஜம் தட்டுகிருர்—என்ருல் அந்த ஆளுடைய மனேநிலையை எவரும் சந்தேகிக்கத்தான் செய்வார்கள். பாவம்! ஏதோ கோளாறு என்று பரிதாபப்படுவார்கள்.

அந்தப் பரிதாபத்துக்குரிய அரசியல்—அல்ல அல்ல, புதுத் தேசியத்தின் பயில்வானுகமேடையேறி இருக்கிருர்—தி. மு.க. வின் மாஜி சொல்லின் செல்வரான சம்பத்!

சொல்லிலே செல்வம்.

கொள்கையிலே குழப்பம்,

செயலிலே சூன்யம்

ஆகியவற்றை தேவையின்றியே திரட்டிக்கொண்டு, திசை தெரியாமல் திண்டாடுகிருர் சம்பத்,

சவால் விடுகிருர்—

போர் முரசடிக்கிருர்'

யாருக்கு சவால்?

யாரோடு போர்?

என்று திரும்பிப் பார்த்தால் எதிரியையே காணேம். யார் அவருடைய எதிரி என்பதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை-அவராகவும் தெரிவிக்கவில்லை!

தி. மு. க. தான் என் எதிரி—அதற்கே எனது சவால்—என்று சம்பத் சொன்னல் அதை பிறர் நம்புவது இருக்கட்டும்-அவரே அதை நம்பமாட்டார்.

ஏனெனில்,

சம்பத், இவ்வளவு நாள் இவ்வளவு வேகமாகத் தொடைதட்டி. மார் தட்டி, அறை கூவியும்,

தி. மு. க.வினர் சம்பத்தை ஒரு எதிரியாகப் பாவித்து அவரது சவாலை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

தனது வீட்டில் வளர்ந்தபிள்ளை எதிரே போய் துள்ளுவதைப் பார்த்து மகிழ்ச்சிப்படுகிற நிலையைவிட்டு இன்னம் மாறவில்லை என்றே தோன்றுகிறது.

என்னதான் சம்பத் வீர, தீரசூராக இருந்தாலும் தி. மு. க. ஊட்டிய பால்இன்னம் அவர்உதட்டில் இருக்கிறது—அந்தத் தெம்பு பிள்ளையைத் துள்ள வைக்கிறது—என்று இருகட்சிக்கும் சம்பந்தமற்ற ஒரு பெரியவர் கூறி ஆயாசப்பட்டார்.

இங்கிலையில் சம்பத்துக்கு யார் எதிரி?

காங்கிரசா?

அதுதான் அவருக்கு தேசிய வேடத்தைப் போட்டுவிட்ட கட்சி. ஆகவே அது, சம்பத்துக்கு ''பிளாக் மார்க்கெட்'' நணபன்.

பார்வார்டு பிளாக் கட்சியா?

அது மேற்கத்திய ஏகாதிபத்ய சக்திகளையே முறியடித்து, இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மாவீரனின் கட்சி. அதை எதிரிஎன்று சம்பத்சொன்னல் அவர் மக்கள் குலத்துக்கே எதிரியாகத் தீரவேண்டும்.

சுதந்திரக் கட்சியா?

அது காங்கிரசின் எதிரி. காங்கிரசின் எதிரிகள் சம்பத்துக்கு

“கண்ணகி”

நண்பர்களாக இருப்பதை அவரே அநுமதிக்க மாட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சியா?

அது, சர்வதேசியம் பேசும் கட்சி. தாலூகா அரசியல்வாதியான சம்பத் சர்வதேசியக் கட்சிக்கு எதிரி ஸ்தானம் பெற முடியாது.

பிரஜா — சோஷலிஸ்டுக் கட்சியா?

தமிழ்நாட்டில் அதற்குச் செல்வாக்கே இல்லையாம்-சம்பத்தின் ஓட்டை மீட்டர் சொல்லுகிறது.

தமிழரசுக் கழகமா?

தி. மு. க. விலிருந்து விலகிய உடனேயே அங்குதான் போனர் ஆலோசனைக்கு. ஆகவேஅதுவும் எதிரி இல்லை.

ஆதித்த நாரின் நாம்-தமிழர் கட்சியா?

சகலசம்பத்துக்களுக்கும் அதுதான் இரும்புப் பெட்டி. அதுவும் எதிரியல்ல.

பிறகு யார்தான் எதிரி?

மிச்சமிருப்பது தி. மு. க.தான்!

தி. மு. க. வை எதிரி என்ருல் அது, சம்பத்தின் வேரில்லாத தமிழ்நாட்டை எதிர்க்க வேண்டுமே?

எதிர்க்கவில்லை! தம்பி சம்பத், நீ தமிழ்நாடு வாங்க புறப்படுகிருயா, வாங்கு—உறுதுணையாக இதோ எங்கள் ஆசி—என்றல்லவா சொல்லுகிறது!

இப்படிப், பாவம்!—பாவம் பிசகாமல் சொல்லுகிற ஒருகட்சியை எதிரி என்று சம்பத் சொன்னல் அதை ஏற்பதற்கு நாதி ஏது?

ஆனல் சம்பத்; தி. மு. க.வின்

திராவிட நாட்டை இடிக்கிறேன் பார்-என்று கர்ஜிக்கிருர்.

இடிப்பதையாவது பார்க்கலாமென்று திரும்பிப் பார்த்தால் அங்கு ஒன்றையும் காணேம்.

திராவிடநாடு தி. மு. க. வின் கோரிக்கை உருவில் நிற்கும் ஒரு கொள்கை. அது இன்னம் உயிராடும் உருவமாகவில்லை. அதற்காக அவர்கள் பாடுபடுவதாகச் சொல்லுகிருர்கள்.

உருவமாக உருப்பெறுமுபே அதை எதிரியாக வரித்துக்கொண்டு இடிக்கிறேன் ஒழிக்கிறேன். என்று தமிழ்த் தேசியம் என்ற அரிதாரத்தோடு முழக்கினல், முழக்குகிற நபரை நாடு நம்புமா? சிரிக்குமா?

எவரையாவது சம்பத் தனக்கு எதிரியாகப் பாவித்துக் கொள்ளலாம். ஆனல் அவரை யாரும் எதிரியாகப் பாவிக்கத் தயாராக இல்லை.

ஏனெனில், எதிரியிடம் வீர்யமும் விவேகமும், கொள்கைத் திராணியும் இருக்க வேண்டும் என்பதில் எச்சரிக்கையாகவுள்ள நாடு தமிழ்நாடு.

சம்பத்திடம் அதெல்லாம் இருப்பதாகத் தெரியவில்லை.

முப்பதே நாளில் ஒரு கட்சியை இயக்க அந்தஸ்துக்கு இறக்கி விட்ட ஒருவரை தீர்க்க முள்ள தலைவன் என்று கொள்ள எவனும் முன்வரமாட்டான்.

தமிழ்த் தேசியக் கட்சி தமிழ் நாட்டை விடுவிக்கும் ஒரு விடுதலை இயக்கம்.

என்று சம்பத்தே கூறி விட்டார்.

கட்சிக்கும், இயக்கத்துக்கும் உள்ள தர வேறுபாடே சம்பத்திடம் தகராருக இருக்கிறபோது, தமிழ் நாடாவது, புடலங்காயாவது—வெங்காய நாடுதான் அவருக்கு அடைக்கலம்!

ஒரு கட்சியின் திட்டங்களை நிறைவேற்றுபவைதான்இயக்கங்கள். ஒரு கட்சியிலிருந்து பல இயக்கங்கள் உண்டாகலாம். கட்சியின் கிளைதான் இயக்கமேயன்றி, இயக்கமே கட்சி அல்ல.

திரு. சம்பத், தனது தமிழ்த் தேசியக் கட்சியையே முப்பதாவது நாளில், விடுதலை இயக்கமாக்கி விட்டார்.

இவ்வளவு பெரிய தலைவராக நாடெங்கும் தி. மு. க. வசைப் புராணமாற்றிவருகிற சம்பத்துக்கு கட்சிக்கும், இயக்கத்துக்கும் உள்ள தரபேதம் தெரியாதிருக்குமென்று நாம் நம்பவில்லை, தெரியும், ஆனலும் அவருடைய கட்சியின் நரம்பு அமைப்புகளே, அக் கட்சியை ஒரு இயக்க அந்தஸ்துக்கு மேல் இயங்கிவிடாது. அதில் உள்ள உண்மையை அவரால் அடக்க முடியவில்லை. அதனல், அவர் அறியாமலே அவரது கட்சிக்குள்ளவலிமை வெளிப்படுகிறது.

அதாவது, சம்பத்தின் தமிழ் தேசியக் கட்சி, காங்கிரசின் ஒரு உட்கிளையேயன்றி ஓங்கார சக்தி பெற்ற தனிக்கட்சி அல்ல என்று நாட்டில்பொதுப்படையாக பேசப்படுவது கொஞ்சங் கொஞ்சமாக, சம்பத் மூலமே நிரூபணமாகி வருகிறது.

இவ்வளவையும் ஆராய்கிறபோது சம்பத்தை எதிரிஸ்தானத்தில் வைக்க எவரும் தயாராக இல்லை. எனவே அவர், காங்கிரசுக்கு கங்காணிக் கட்சிகள் ஏதேனுமிருந்தால் அதில் போய் ஒட்டிக்கொள்ளும் தகுதிக்குமேல் அவர் தன்னை மேம்படுத்திக் கொள்ளவில்லை என்றே கருதத் தோன்றுகிற நிலையில் அவர் யாரை எதிரியாக வரிக்கிருர் என்பதை ஆராய்கையில் அவர்தான் அவருக்கு எதிரி-அவர் விடும் சவால் அவருக்கே-

என்ற முடிவு வெகு சுலபமாகக் கிடைக்கிறது. இதை எப்படி இல்லை என்க இயலும்?

இலங்கை இந்தியர் பிரச்சினையின் மூலம் மா.பொ.சி.யை அணுகினர்—ஏதோ பேசினர்—பேசிய பேச்சு அடங்குமுன், அவரையே தன்னேடு சேருவார் என்றுகூறி, தனது குணத்தைக் காட்டிய சம்பத்தை மா. பொ. சி.யும் உதறி விட்டார்.

ஆதித்தனாரை நாடினர். தனக்கு எந்தக் கட்சியிலும்

(9-ம் பக்கம் பார்க்க)

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 16-6-61 கதிர் - 15

காந்தியடிகளா யிருக்கிறர்!

ஏழை பங்காளர்கள் என்று சொல்லப்படும் ஒவ்வொரு காங்கிரசு மந்திரிக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஆறுயிரம் செலவழிவதாக, இந்தியாவின் ஆடிடர் ஜனரல் அண்மையில் தெரிவித்திருக்கிருர்! கொடுமைக்காரன் என்று சொல்லப்பட்ட வெள்ளைக்காரனுட்சியில் வைசிராய் எக்சிகூடிவ் கவுன்சில் என்ற ஒன்று, ஐந்து பேருடன் ஆண்டது! இப்போதோ மந்திரி—துணை மந்திரி—உதவி மந்திரி—சக மந்திரி—'சன்னத்து' இலாத மந்திரி—என்று' டில்லியில், ஐந்துமடங்குக்குமேல் அதிகமான மந்திரிகள் இருக்கிருர்கள்!! அப்போது வைசிராய் எக்சிகூடிவ் கவுன்சில் உறுப்பினருக்குச் சம்பளம் ரூபாய் 5500 தான்! ஐந்துபேர் அப்போது!! இம்மாபெரும் துணைக் கண்டத்தை ஆள அதைவிட ஐந்துமடங்கு மந்திரிகள் அதிகம் இப்போது—ஒவ்வொருவருக்கும் மாதம் அழிவதோ, ரூபாய் 6000 மாம்!!

"அமைச்சர் சம்பளம் மாதம் ரூ 2500 தானே? 6000 என்கிருயே!' எனக் கேட்கலாம் நீங்கள். வரியில்லாத முறையில் ரூ 500 அலவன்சாகத் தரப்படுகிறது—மாளிகை உண்டு—தோட்டப் பராமரிப்புக்கான செலவு சர்க்காருடையது—கார் உண்டு—குடும்பத்தில் யாருக்கு உடல் நலமில்லையென்றலும் இலவச மருத்துவ வசதியுண்டு. அதோடு, சுற்றுப்பயண அலவன்சு, அந்த மாநாடு இந்த மாநாட்டுக்கெனப் போய்வரச் செலவு—எல்லாவற்றையும் கணக்கிட்டு ரூபாய் ஆறுயிரம் ஆகிறதென்கிருர், ஆடிடர் ஜெனரல்!! "ஏன் 2500 சம்பளம் என்ற பெயரில் இத்தனைச் செலவு செய்வதற்குப் பதில் ரூ 6000 சம்பளமாகக் கொடுத்து எல்லாச் செலவுகளையும் நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் எள்று செய்துவிட்டால் என்ன!'' என்கிற யோசனையையும் சொல்லியுள்ளார், சர்க்காரின் கணக்கைப் பரிசோதிக்கும் அதிகாரியான அவர். அரசுக்கு இதனுல் மிச்சம் வருமே என்கிற ஆர்வத்தில் இப்படிச் சொல்கிருர்! ஆனுல், 6000 த்தை வாங்கும் அமைச்சர்கள், அப்போது என்ன செய்வார்கள் என்பது தெரியாதா!!

சர்க்கார் செலவில்லை, தங்கள் சம்பளத்தில் செலவுசெய்து கொள்ள வேண்டும் என்கிற நிலை வந்தால், டிரைவர்கள், வீட்டு வேலைக்காரர்கள் வீதியில் விரட்டப்படுவார்கள். சர்க்கார், அல்லது சர்க்காருடைய ஆதரவு பெற்று நடக்கும் துணிமணிக் கடைகள், அழகுப் பொருள் விற்பனை நிலையங்களில், வியாபாரம் மந்தமாகும்—மந்திரிகளின் துணைவியர், போக மாட்டார்கள்! அகில இந்தியாவிலுமுள்ள மக்களுக்கு இப்போதுபோல வாரத்துக்கு இரண்டு தடவை ஏதாவது ஒரு மந்திரியின் 'தரிசனம்' கிடைக்காது—சொந்தப் பணத்தில் செலவு செய்யவேண்டுமே என்று, அமைச்சர்கள் எங்கும் கிளம்பமாட்டார்கள்! காஷ்மீர், ஊட்டி கோடைக்கானல் போன்ற பொழுதுபோக்கும் இடங்களிலுள்ள பெரிய பெரிய ஓட்டல்கள், மந்திரிமார்கள் கலந்துகொள்ளும் மகாநாடுகள் நடக்காமல், வெறிச்சென்று போய்விடும்! உயர்தரமான டாக்டர்களுக்கு மந்திரிகள் வீட்டு வேலை குறைவதால் அதிகநேரம் மிச்சமாகி, ஏழை எளியவர்களுக்கு வைத்தியம் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள்!! பிறகு, என்ன ஆவது!!

சிக்கன ஆசையால், ஆடிடர் ஜெனரல் சொல்கிருர். மந்திரிகளாவது எதற்கு? எதற்கு கோஷ்டி சேர்த்து, குடுமிபிடிச் சண்டை நடத்தி மந்திரியாவது? மக்களுக்கும் நாட்டுக்கும் சேவை செய்யவா! 400 ரூபாய் மாத வருமானம், ஒரு எம். பி. யான சம்பத்தையே அதைவிட முடியாமல் தடுக்கும்போது—பதவியென்ன, சாமான்யமா! பணங்காய்ச்சி மரமான, அதைவிடவா, துணிவார்கள்!

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வோர்தான் இன்றைய பொது வாழ்வில் உள்ளனரேதவிர, "காந்தியடி''களா யிருக்கிருர்!!

—*— —0— —*—

அமெரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸ்கூட அவ்வளவு ஆனந்தப்பட்டிருக்க மாட்டார்! அழகியின் எதிரில உட்கார இடம்பெற்ற கமலா அவ்வளவு அகமகிழ்ச்சியடைந்தான்!! கூட்டத்தை நெருக்கியடித்துக்கொண்டு, வம்புக்கு வந்தோரிடம் 'பிளீஸ்' என்று மன்னிப்புக் கேட்டபடி, அழகியின் எதில்போய் அமர்ந்தான். கூலிங் கிளாசை எடுத்துத் துடைப்பான் — கொண்டுபோயி தருந்தபேப்பர்களை சுவாரசியமாக

:: -தொடர் கதை- ::

படிப்பான்—ஆழ்ந்த சிந்தனையில் அகப்பட்டுக் கொண்டவனைப் போல வெளியே பார்ப்பான்—அவள் இதையெல்லாம் கவனிக்கிருளா என்றும் நைசாகக் கவனிப்பான்.

எதிரேயிருந்த அந்த அழகியின் பக்கத்தில் ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள். அந்தப் பெண்ணின் அருகில் லைலா என்று எழுதப்பட்டிருந்த ஒரு தோல் பை இருந்தது. குதிரை வால் சடையும், குங்குமமிலாத நெற்றியும், ஆபரணங்கள் இலாத முகமும், அழகான தோற்றமும் இளமைப் பூரிப்பும், கொண்டு விளங்கிய அவளுடைய பெயர் லைலா என்று தெரிந்துகொண்டதும், அந்தப் பெயரை மனதிற்குள்ளேயேச் சொல்லிப் பார்த்து கொண்டான் கமலா! இத்தனை நாளும தேடித் தவித்த சித்திராங்கி கிடைத்துவிட்டதாகவே நினைத்தான்.

அடிக்கடி அவள், அவனைப் பார்த்தாள். பார்த்ததுமட்டுமல்ல, உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள் என்பதை அடிக்கடி நெளிந்து வளையும் அவளுடைய உதடுகள் சொல்லின. ஆனந்தப் பரவசமானுன் கமலா! ஆனுல், அந்தப் பெண் ஏன் சிரித்தாள் என்பதை அவன் அறிந்திருந்தால், வெட்கப்பட்டுப்போயிருப்பான்!! அவன் அணிந்திருந்த தொப்பியில் யாரோ தின்றுவிட்டு வீசிய வாழைப்பழத் தோல், ஒட்டிக்கொண்டிருந்தது. அதோடு ஆரஞ்சுப்பழத் தோலும் கிடந்தது வாழைப்பழத் தோல் அவன் அசையும்போது, இப்படியும் அப்படியும் ஆடியது, பழையபாலத்து நாடகமேடை ராஜாக்கள் வைத்துக்கொள்ளும் 'ப்ரூச்' போல, குழிவிழுந்த தொப்பியில் கூத்தாடிக்கொண்டிருந்தது அந்தத் தோல்! அவ்ன் உட்கார்ந்தபோது யாரும்இதைக்கவனிக்கவில்லையே தவிர, அந்தப் பெண் அவன் தலையைப் பார்த்துச் சிரிப்பதிலிருந்து புரிந்துகொண்டனர். அவர்களுக்கும் சிரிப்பாயிருந்தது. அதிலும், தாங்கள் ஏற்கனவே செலுத்தி வந்த சுதந்திரத்தைப் பறிக்க வந்த அந்நியனுக இவனைக் கருதிய பிரயாணிகள், அவனைப் 'பழி' வாங்கும் நல்லதொரு சந்தர்ப்பம் எனக் கருதிச்சிரித்தனர்!

இப்படி எல்லோரும் சிரிப்பதைக் கண்டு, கமலா, கொஞ்சம் திகைத்தான். எதையோ பார்த்து சிரிப்பதாக நினைத்தான். அவர்களைப்போலத் தானும் சிரிக்காவிட்டால் தவருக நினைத்துக் கொள்ளப் போகிருர்கள் என்றெண்ணி, இவனும் சிரித்தான். அந்த வண்டியில் இருந்த பிரயாணிகளுக்கு நல்ல பொழுதுபோக்காயிருந்தது.

வயதில் முதிர்ந்த ஒரு கிண்டல்காரப் பெரியவர், "தம்பி என்ன! ஏதாவது பழக்கடை வச்சிருக்கியோ?'' என்ருர்.

"நோ! நோ! நான் ஒரு ஸ்டோரி ரைட்டர். சினிமாவுக்குக்கூட ஒரு முக்கால் டஜன் கதை கொடுத்திருக்கேன்...'' என்று சொன்னுன். 'சினிமாவுக்கு', என்று கொஞ்சம் அழுத்திச் சொல்லும்போது, அவள் தன்னைக் கவனிக்கிருளா, என்று அவன் பார்க்கத் தவரவில்லை. அவளோ, பெரியவர் கேள்வியைக் கண்டு, புத்தகத்தைப்பார்ப்பதுபோல் முகத்தை மறைத்துக் கொண்டுச் சிரித்தாள்! தனக்குப் போட்டியாக இவன் வந்ததாக ஏற்கனவே எரிச்சலடைந்திருந்த இவனைப் போன்ற 'ரகத்தைச்' சேர்ந்த ஒரு வாலிபன், "ஏன் சார்! இந்தத் தொப்பி எங்கே வாங்கினீங்க...'' என்ருன்.

"இதா சார்! பாரிசிலே வாங்கினேன்...'' என்று, கேட்டவன் பிரெஞ்சுநாட்டுத்தலைநகரம்பாரிஸ் என்று நினைத்துக் கொள்ளும் விதத்திலும் அதே சமயம் சென்னை பாரிஸ் கார்னர் என்று கருதக்கூடிய தோரணையிலும், பதிலளித்தான். "ஏன் சார்! இது எந்த மாடல்?''

"நியூ மாடல் சார்!''

"இல்லே! தொப்பியிலே வாழைப்பழத்தோல், ஆரஞ்சுப் பழத்தோல் இதையெல்லாம் வச்சிருந்து நான் பார்த்தது இல்லே''

கமலாவுக்குத் திகைப்பு வந்தது வாழைப்பழத் தோல்? ஆரஞ்சுப் பழத் தோல்? என்ன விஷயம்!—என்று, மெதுவாகத் தொப்பியை எடுத்தான். அப்போது அவன் முகம் போன போக்கையும், அந்த அழகி உள்பட அனைவரும் சிரித்த காட்சியையும், அடடா எப்படி வர்ணிக்க முடியும்? கற்பனையில் வல்லவனுச்சே! அடடே இதைப் பார்த்துத்தான் இப்படிக் [சிரிச்சீ]ங்களோ—"திரையுலக ஜோதி 'அக்பர்' அம்பி தெரியுமா சார்! அவன் என் அருமைச் சிநேகிதன். பொல்லாத கில்லாடி ரயிலேற்றி அனுப்பவந்த அவன், கிண்டலுக்கு இப்படி பண்ணியிருக்கிருன் சார். இடியட்!'' என்று ஒரு போடு போட்டு வைத்தான்.

அக்பர் அம்பிக்கு இவன் வேண்டியவன்!—என்றதும், பிரயாணிகளுக்குள் ஒரு ஆச்சரியமும் பரபரப்பும் ஏற்படாமலில்லை. இரண்டொருவர், அவன் முகத்தையே பார்க்கலாயினர். முன்பு தனது 'பங்காளி' யாகக் கருதிய வாலிபனுக்குக், கமலாவிடம், இதுவரையில்லாத மரியாதை ஏற்பட்டது.

அக்பர் அம்பியை உங்களுக்கு அவ்வளவு நல்லாத் தெரியுமா சார்! ஏன் சார் அவர் போட்டுக் குளிப்பது 'லக்ஸ்' சோப்புதாமே! ஏன் சார், அதைத்தானு

அண்ணல்

அவர் போட்டுக் குளிக்கிருர்?''

"ஆமாம்! தினம், ஒரு சோப்பு —அப்படித் தேய்ச்சிட்டு வீசி எறிஞ்சுடுவான், அடடா! நேத்துத்தான் ஒரு கார் வாங்கினுன். என்னைப் பார்த்து, டேய்! கமலா! —என் மெயர் கமலநாதன், என்னை எல்லாரும் கமலான்னு தான் கூப்பிடுவாங்க—புதுக் காரிலே, நீதாண்டா மொதல்லே ஏறணும்னுன். என்ன சார் பண்ணுறது! உயிருக்குயிரான பிரண்ட் சொல்றப்போ, தட்டமுடியுமா [ஏ]றினேன் சார்!''

கற்பனைகளைக் கமலா தட்டிவிட்டான்! டீக்கு லாட்டரி அடிச்சப்போ தான் வைச்சுக் காப்பாத்தியது—அவனும் இவனும் சேர்ந்து செய்த விளையாட்டுகள்-இப்படி அள்ளிவிட்டுச்கொண்டேயிருந்தான்!! பிரயாணிகளும் வெகு சுவாரசியமாகக் கேட்டனர். லைலா என்கிற பெயர் கொண்ட, அந்தப் பெண்ணும் இவனுக்கும் அக்பருக்குமுள்ள சிநேகிதத்தைக் கூர்ந்து கவனிக்கலானுள். இந்நேரம் கமலா விட்ட 'டூப்பு'களை யெல்லாம் மூச்சுவிடாமல் கேட்டுக் கொண்டிருந்த ஒரு ஆள்—இவ்வளவு நேரமும் மேல் பலகையில் படுத்துக்கொண்டிருந்தவன்—கீழே இறங்கி கமலாவைக் கண்டதும், "[ஹ]லோ! பிரதர்? எங்கே போறீங்க?'' என்று முதுகில் தட்டினுன்.

அவன் யாரென்று புரியாமல், விழித்தான், கமலா. "நீங்க யாருன்னு...எனக்கு...'' என்று இழுத்தான். "என்னுப் பிரதர்! என்னைத் தெரியலே...நான்தான் அக்பரோட கார் டிரைவர் அய்யாக்கண்ணு! என்னைத் தெரியலேங்கிற நீ, அவரைத் தெரியும்ன்னு சொல்லி என்னமா 'டூப்' விடுறே...சார்! இவன் யாரோ, டூப். நான் அக்பருக்கிட்டே அஞ்சு வருஷமா சார் டிரைவரா யிருக்கேன். ஒருநாள்கூட இவரைப் பார்த்தது இல்லே. ஏன்யா! இப்படி இல்லாததை யெல்லாம், தெரியாதவுங்க கிட்டே அளக்கிறே...ஆளைப்பாரு! இந்த லட்சணததிலே, சூட்டு, கோட்டு...சீ! இதுவும் ஒரு ஜன்மமா!!'' நகரய்யா கொஞ்சம்...''

பேசாமல் நகர்ந்து உட்கார்ந்தான், கமலா. இவ்வளவு சீக்கிரம் தன்னுடைய கீர்த்திக்குப் பங்கம் வருமென்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவனைப் பார்த்தாலோ, 'ரௌடியைப் போலிருந்தான். அவளோ, புத்தகத்துக்குள் முகத்தை மூடிக்கொண்டாளே ஒழிய சிரிப்பது போலிருந்தது.

இப்படி எல்லோருக்கும் மத்தியில் தான் அவமானம் அடைந்ததைவிட, அவள் எதிரில் அவமானம் அடைய நேர்ந்ததை அவனுல் தாங்கமுடியவில்லை!! அவனுக்கென்று வாதாடவும், அந்த வண்டியில் யாருமில்லை. ஆகவே, பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்தவன், அப்படியே தூங்கிப்போய்விட்டான்.

எவ்வளவு நேரம், தூங்கியிருப்பானென்று அவனுக்கேத் தெரியாது. முதல் நாள் சென்னையில் அலைந்த அலைச்சல்வேறு. யாரோ தன்னைத் தட்டி எழுப்புவது தெரிந்து கண்விழித்துப் பார்க்க, எதிரே டிக்கட் பரிசோதகர் நின்று கொண்டிருந்தார்! பொழுதுபோய் இருட்டாகியிருந்தது. அருகிலிருந்த பழைய பிரயாணிகளுக்குப் பதில், பல புதிய பிரயாணிகள் அமர்ந்திருந்தனர். 'சார் டிக்கட்!' என்ருர், பரிசோதகர். இவனிடம் இருப்பதோ பம்பாய் டிக்கட்! என்ன செய்வது? கற்பனையில் வல்லவனுச்சே!! அதனுல், டிக்கட்டைத் தேடுவதைப்போல, இப்படியும் அப்படியும் தேடினுன். "சார்! எங்கேயோ, தொலைஞ்சுபோச்சு போலிருக்கு...பரவால்லே! நான் கல்கத்தாவுக்குத்தான் போரேன். எவ்வளவு அபராதமோ நான் கட்டத் தயார்- எழுதிக்கொடுங்க...'' என்று சொல்லிவிட்டு எதிரேயிருந்த அழகியைப் பார்த்தான். அருகே கிழவியில்லை. அவள் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். டிக்கட் பரிசோதகர், கல்கத்தாவுக்குரிய கட்டணத்தை எழுதி, நீட்டினுர்.

அவருக்கு உரிய பணத்தை எடுத்துக்கொடுப்பதற்காகத் தன்னிடமிருந்த பணப் பையைத் தேடினுன்—கமலா! பையில்லை—'சொரேர்' என்றது அவனுக்கு—ரூபாய் 2800 இருந்த பை எங்கே போயிருக்கும்—பழைய ஆட்கள் அங்கே இல்லை — இறங்கிப் போகும்போது, யாராவது...அவனுடைய தலை சுற்றியது!

இப்போது என்ன செய்வது? அவன் யோசித்துத் தலையை சொரிந்து கொண்டிருந்த போது, ரயில் நின்றது, டிக்கட் பரிசோதகர் புரிந்து கொண்டார். "வித் அவுட் டிக்கட்டா! ஆளைபபாரு ஜெண்டில்மென் போல!! இறங்குய்யா...'' என்று கழுத்தில் கையைக் கொடுத்து, இறக்கினுர் அவர். இந்நேரம் தூங்கிக்கொண்டிருந்த அவள், இந்தச்சமயம் பார்த்துத்தானு விழித்துக் கொள்ள வேண்டும்? என்ன செய்வதென்று புரியாத நிலையில் எந்தக் கற்பனையும் ஓடாத நிலையில், தோழர் ஜானகிக்குப் பல வித திட்டங்களைப் போட்டுக் கொடுத்த அந்தச் சூரப்புலி, டிக்கட் பரிசோதகர் அதட்ட திருதிருவென்று விழித்துக்கொண்டு இறங்கினுன் அந்த அழகியோடு ரயில் நகர்ந்தது!! எண்ணிய வழியில் போவதைவிட்டு, இடைவழியில் பாதை மாறிய அவன், டிக்கட் பரிசோதகரிடமிருந்து ஸ்டேஷன் மாஸ்டரிடம் சிக்கியவனுய் திகைத்துப் போய் நின்ருன். அந்தோ, பரிதாபம்!

2

சிறைக்குள்ளேயோ, ஜானகி வீராதி வீரனைப் போல இருந்தான் யார் வந்து பார்த்தாலும், என்ன கேட்டாலும், "நான்தான் கமலாவைக் கொன்றேன்'' என்று சொல்லிக்கொண்டேயிருந்தான். இந்தக் கோலத்தைக் கண்டு, சிறையில் அவனைப் பார்க்கவந்த பாலாமணி ஓவென்று கதறிவிட்டாள்.

"உங்களுக்கு ஏனத்தான் இப்படிப் புத்தி போயிற்று?'' என்று கத்தினுள். மகளைத்தேற்றி அங்கிருந்து அழைத்து வருவது பாருமைநாயகத்துக்குப் பெரிய அடாகி விட்டது, அவன் சிறையிலடைக்கப்பட்ட நாள்முதல் உருவே மாறி விட்டாள் அந்த உத்தமி! உண்மையில் தன்னத்தான் ஒரு பெண்ணை அடையவே இவ்வளவுபெரிய நாடகமாடுகிருன் என்று தெரிந்தால் அந்த நல்லவள் மனம் என்ன பாடுபடும்'! ஆண்டவன் ஆண்டவன் என்கிருர்களே-அவன் என்ன அயோக்கியனே? அப்பவர்களிடம்ஆசை வரும்படியான உணர்ச்சியைஏன் உத்தமர்கள் உள்ளத்தில் அவன் உண்டாக்குகிருன்! அழகு மணியான பாலுவுக்கு, மிகமிக அற்பனுன ஜானகியைத் தன் 'தெய்வம்'போல் நினைக்க வேண்டிய எள்ளுணர்வு ஏன் வந்தது!! இதுதான் தமிழ்நாட்டுப் பெண்களின் பெண்மையோ. இந்த பெண்மையால், யாருக்கு நன்மை...இப்படி, அருமை நாயகம் எண்ணியெண்ணி ஓடாய் இளைத்தார். என்ன செய்வதென்று புரியாமல் சப்-இன்ஸ்பெக்டர் சாந்தமூர்த்தியிடம் போவார். சாந்தமூர்த்தி என்ன செய்ய முடியும்?'' "சார்! நான்தான் கொலை செய்தேனென்று அவன் சொல்வதைக் கேட்கும்போதே எனக்குச் சந்தேகம்தான். எத்தனையோ கொலை கேசுகளை விசாரிச்சிருக்கேன். நிச்சயமா, ஜானகி-கொலை செஞ்சிருக்கமாட்டான். ஆனுல், சந்தர்ப்ப சாட்சியங்கள் சரியாதருக்கே. ஜானகி கசாப்புக்கடையில் கத்தி வாங்கியபொழுது கொலை செய்யப்போறேன்னு கத்திவிட்டு வந்திருக்கான்—கண்ட காட்சியும் இருக்கு—வீதியில் கத்தியோடு போயிருக்கான்- அதோடு, இவன் அவனைக் கொன்னதா சிலம்புச் சிங்காரம் வேறே சொல்ருன்! ஒண்ணும் புரியலேயே சார்! என்கடமையை நான் செய்யாமல் முடியுங்களா? நிச்சயம் அவனுக்குத் தூக்குத் தண்டனைதான்!'' என்ருர். நாயகம் இதை எப்படி மகளிடம் சொல்ல முடியும்? ஜானகியின் சித்தப்பாவான சிவலிங்கமோ, கஞ்சன். எது எப்படிப் போனுலும் தன் பணம் செலவழியாகக் கூடாது என்று எண்ணுகிறவர்,

"நான் 'ராமனை'த் துதிக்கிறேங்க...அவன் விட்ட வழி'', என்று அந்தி மறைந்ததும், பக்தையும் அவருமாய் பரலோகம் கண்டு கொண்டிருந்தனர்! பாவம், ஜானகியோ, ஏதுமறியாளுய், இந்தியாவெங்கும் தன்புகழ் சொலிக்க்போவதை எண்ணிச் சிறையில் கிடந்தாள்!! இந்த இக்கட்டான நிலையைக் கண்ட அருமை நாயகம், வேறு வழியில்லாததால் துப்பறியும் துரைசிங்கத்திடம் சென்ருர்...

(தொடரும்)

தி. மு. க. 3-வது பொதுமாநாடு

மதுரை திருப்பரங்குன்றத்தில், ஜூலை 13, 14, 15, 16 ஆகிய தேதிகளில் நடைபெறவிருக்கும் மாநாட்டிற்கு பஸ்மூலமாக போக விரும்புகிறவர்கள் ரூபாய் 5-முன் பணமாகக் கொடுத்துத் தங்கள் பெயரை பதிவுசெய்துகொள்ள வேண்டுகிருேம்.

புறப்படும் இடம்: பெங்களூர் அக்கிபேட்டை, தி. மு. க. பணிமனை.
நேரம்: 12-ந்தேதி, காலை 8-மணி.
போகவர பஸ்கட்டணம் ரூ 22-00

நிர்வாகி, எம். ஜி. சாமி,
2-64, அக்கிப்பேட்டை,
பெங்களூர்-2

குளித்தால்போகும் அழுக்கா, கொள்கை

——*

எமை ஆளாக்கியவரே! பெரியாரே!

இதுதான், பொதுவாழ்வா

ஏரிமலை இலந்தைப் பழமாகியது! சிங்கம் சுண்டெலி ஆகியது! அஞ்சாநெஞ்சன் அஞ்சிடும் ஆமையானார்! வீரன், வீழ்ந்தார்! வேதனை காணீரோ— என்றே, எழுதியிருப்போம். முன்பென்றால் இப்போது, தமிழ்நாட்டின் பொது வாழ்வு போகிற போக்கை நினைத்தால், இப்படி எழுத வரவில்லை—ஏ, தமிழ்நாடே! இதென்ன கோலம்—காலம் எதற்கோ இதெல்லாம்? என்றே, கண்ணீர் வடிக்கச் சொல்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே, சுயமரியாதை உணர்வையும், காங்கிரசாதிக்கத்தின் சுயநலத்தையும் சுட்டிக் காட்டியவர் பெரியார்! இந்தக் கருத்தைக் சொல்ல அவர் சுற்றாத ஊரில்லை—பேசாத பேச்சில்லை—எழுதாத நாளில்லை—எடுப்பேன்! கவிழ்ப்பேன்! இந்த காமராஜ்யார்? நான் காங்கிரசில் தலைவனாயிருந்தபோது பந்தலைக் கட்டிக்கொண்டு கொடி தூக்கிய தொண்டன்! இப்படிப் பேசுவார்-வடநாட்டு ஆதிக்கத்தைக் காலிலே போட்டு மிதிப்பேன், திராவிடா, உனக்கு மானமில்லையா என்று வீரக்குரல் எழுப்புவார்!! வெண்ணிறத் தாடி அசைய, கைத்தடி மேடையை அதிரவைக்க, சிங்கம்என எழுந்து, அவர் செப்பிய உரைகேட்டு தமிழகமே எழுந்தது—அந்த உரையினிலிருந்த உண்மை கண்டு, இளைஞரெல்லாம், ஏறுநடை போட்டவண்ணம் அவர் பாதை நாடினர்—என்னால்தான் காங்கிரசுக் கட்சியின்சமாதிக்குக் கடைசி ஆணி அடிக்கப்படும் என்று கர்ச்சித்தார் — நம்மையெல்லாம் உருவாக்கினார்—அந்த நேரத்திலே, காங்கிரசாரும் விடவில்லை! காறித்துப்பினர், கன்னாபின்னாவென பேசினர்! தெரியாதா இந்த நாயக்கரை—காங்கிரசை விட்டு பணத்தை தூக்கிக்கொண்டு ஓடியவர்—வகுப்புவாதி—சுயநலவாதி—சமுதாயச் சனியன்—பீடை! என்றெல்லாம்ஏசினர் இன்றுள்ள காமராசர் கட்டைவிரலை வெட்டுவேன், நாக்கை அறுப்பேன் என்று கர்ச்சித்ததை நாம் மறந்துவிடவில்லை-இதே காமராசர், பாராளுமன்றத்துக்குக் நின்றபொழுது எதிர்த்த ஜி. டி. நாயுடுவை ஆதரித்துப் பேசினார் அய்யா! அப்போது காங்கிரசார் சொன்னார்கள், பணம்படுத்துகிறபாடு, நாய்க்கர் நாயுடுவுக்கு வேலை செய்கிறார், எவ்வளவு பணம் வாங்கினாராம் தெரியுமா என்று. காமராசர் என்னென்ன, சொன்னார் என்பதை நாம்மறக்கவில்லை! அப்போது மட்டுமல்ல, அய்யா, சென்னையில் ஓட்டல் மறியல் செய்தபோது-சட்டசபையில் ஏ. கோவிந்தசாமி, கேட்ட கேள்விக்கு நிதியமைச்சர் சுப்ரமணியம் எவ்வளவு ஏளனமாகப் பதில் சொன்னார் என்பதையும் நாம் மறக்கவில்லை!!

இப்படியெல்லாம் தூற்றிய காமராசரும், சுப்ரமணியனாரும், காங்கிரஸ் தலைவர் அளகேசனும். கடந்த திங்கள் கோவையிலே கூடிய காங்கிரஸ் மாநாடொன்றில், அய்யாவைப் பாராட்டினராம்.

"ஈ. வெ. ரா. என்னென்ன செய்தார் தெரியுமா, காங்கிரசுக்கு! கோவை ஜில்லாவிலேகாங்கிரசை வளர்த்தவர், அவர். எந்தக் கட்சியிலே யிருந்தாலும், அவர் மனதில் காங்கிரசென்றால், தனியான ஒரு ஆசையுண்டு. அவர் சேவை என்ன சாமான்யமா!", என்று மூவரும் முழக்கினாராம். செய்தி கண்டபோது, ஏதேது இந்தளவுக்குக் கண்ணியம் ஏற்பட்டிருக்கிறதே என்று மகிழ்ந்தோம்! அரசியல் வாழ்வில் கொள்கை மாறுவதன் காரணமாக, சந்தைக்கடை மொழியையும், சாக்கடை நடையையும் பின்பற்றப்படுவது எப்போதுமே தவறென்பது நமது எண்ணமாகும். அதனால், அமைச்சர்களையும் அளகேசனாரையும் கூட பாராட்டலானோம்! ஆனால், இப்போதுதான் விளங்குகிறது அவர் பாராட்டியதன் இரகசியம்—திங்கள் ஒன்றாகவில்லை, செயற்கரிய செய்தவர் என பாராட்டப்படும் பெரியார், சேலம் இராசீபுரத்துக்கு அருகிலே, காங்கிரசு மேடையேறிவிட்டார்! திகைக்காதீர்கள் தோழர்களே? இது வதந்தியல்ல! கண்ணாரக் கண்ட உண்மை!! கடந்த 3-ந்தேதியன்று, இராசீபுரத்தை அடுத்த மருளையாம்பாளையத்தில், காங்கிரசுக் கட்சியின் கூட்டத்தில் அய்யா கலந்து கொண்டிருக்கிறார். மூவர்ணக் கொடி பறந்த அந்த மேடையேற எப்படித்தான் மனம் வந்ததோ? ஏறினார்! பேசினார்!! என்ன பேசினாராம் தெரியுமா? "நான் உயிரோடு இருக்கும்வரை காங்கிரசை ஒழிக்க முடியாது," என்பதாக. ஆச்சரியப்படாதீர்கள்! அந்த அளவுக்கு, தமிழ்நாட்டின் அரசியல் வாழ்வு இருக்கிறது!! இவ்வளவு தூரம் காங்கிரசுக்கு வக்காலத்து வாங்கும் அய்யா, காங்கிரசில் இரண்டறக் கலந்து விட்டாரா என்றால், இன்னுமில்லை. அவருக்கென்று தனிக்கட்சிஇருக்கிறது-திராவிடமா! சேச்சே!! என்று அய்யா பேசுவார்-ஆனால் கட்சியின் பெயர் திராவிடகழகமாகவே யிருக்கும். திராவிட கழகம் ஒரு வகுப்பு வாதக் கழகம் என்பார், நேரு—வகுப்பு வாதிகளைக் காங்கிரஸ் கண்டிக்க வேண்டும் என்பார் சஞ்சீவி— ஆனால், காமராசர் தன் கட்சிக் கூட்டத்தில் பேச அனுமதிப்பார்! ஒரு அரசியல் கட்சித் தலைவரை அழைத்துத் தன்னுடைய கட்சியின் சிறப்பைப் பற்றி பேசுமாறு செய்கின்ற தைரியம் உலகில் யாருக்கும் வராது - அப்படி அழைத்தால் 'போகின்ற' தைரியமும், இங்கன்றிநாம் கண்டதில்லை! அக்கூட்டத்துக்குப்போய் அய்யா, தன் கொள்கைகளையல்ல-காங்கிரசை ஒழிக்க, யாராலும்முடியாதென்றுகர்ச்சிக்கிறார்!

எம்மை ஆளாக்கிய தலைவரே, இதென்ன கொடுமை?—என்று நாம் கேட்பதைத் தவிர, நாமென்ன செய்ய இயலும். இப்படி ஒரு கட்சியை வாழ்விக்க இன்னொன்று எதிர்க்கட்சிஏன்? அமைப்பேன்? அதன் சார்பில் அடிக்கடி ஜெயிலுக்குப் போய்வர குருசாமி அண்ணன் போன்ற தொண்டர்கள் ஏன்? அரசியல் என்றால் என்ன, அன்ன சத்திரமா! சுழற்றி விடும் பம்பரமா! டிக்கெட் வாங்கிக்கொண்டு ஏறும் ரயிலா!! கொள்கை என்பது என்ன, குளித்தால் போகக் கூடிய அழுக்கா. பணமெனும் வெயிலைக் கண்டால் உருகக்கூடிய பனிக்கட்டியா!! உண்மையில், தமிழ்நாட்டின் பொதுவாழ்வு எந்தளவுக்கு யாரால் தலைநிமிர்ந்ததோ அவராலேயே இன்று தலைதாழ்த்தும் கட்டத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறது — அதை ஆளும் கட்சி, மிக அருமையாக, வரும் தேர்தலையொட்டிச் செய்கிறது! பொதுமக்களே-எது பொது வாழ்வு? சாவே வரினும் உண்மையைச் சொல்வேன் என்ற அந்த நாள் பெரியார் சொன்னதா!"

"என்னமோங்க, இன்னைக்கு, அவனும் காசு கொடுத்து, கூட்டம் கூட்டி நம்மைப் பேசச் சொல்றான்," என்று இன்றைய பெரியார் சொல்வதா!! உண்மையில், நமது மாபெருந் தலைவர் எனக் கொண்டாடிய ஒருவருக்கு, இப்படியெல்லாம் சலனசித்தம் ஏற்படுகிற அளவுக்கு நிலைமை போனது கண்டு, "தகுமா அய்யா?" என்று பணிவோடு, கேட்கிறோம். "தகுமா அரசியலுக்கு?", என்று கண்ணீரோடு கேட்கிறோம். இதுதானா, நீங்கள் காட்டிய பொதுவாழ்வு, என்றும் வேதனையோடுகேட்கிறோம்! வீரன் வீழ்வதாமே! காங்கிரஸ் மேடை ஏறுவதாமே! அரசியலே பொது வாழ்வே - உன்னிலையெண்ணி, உண்மையில் கலங்குகிறோம்!!

—0—

ஆதித்தன்கூடச் சொல்கிறார்!

கே: சுதந்திரத் தமிழ்நாடு என்று சொல்லிக்கொண்டே ஈ. வெ. ரா. பெரியார் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கிறாரே! இதன் காரணம் என்ன?

ப: நம்மோடு உடன் பிறந்த ஒருவர் சாக்கடையில் விழுந்துவிட்டால் அவரை சாக்கடையிலிருந்து கை தூக்கிவிடவேண்டும். அப்படிசெய்யாமல் நாமும் போய் சாக்கடையில் விழலாமா? அதுபோலத்தான்இருக்கிறது ஈ. வே. ரா. பெரியார் காங்கிரசை ஆதரிப்பது. தமிழ்நாடு டெல்லிக்கு அடிமையாக இருக்கவேண்டும் என்பதே காங்கிரஸ் கட்சியின் கொள்கை. அந்தக் கட்சியில் பச்சைத் தமிழர் காமராஜர் இருக்கிறார் என்றால் அவரை அதிலிருந்து வெளியே கொண்டுவர வேண்டுமே தவிர அவர் இருக்கிற காங்கிரஸ் கட்சியில் நாமும் விழுந்து ஆதரிப்பது என்பது பெரும் தவறு.

* * *

கே: சம்பத் கட்சியின் கொள்கைகளை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

ப: கண்ணும், கையும், காலும் இல்லாத ஒரு முண்டம் வேண்டும் என்று சம்பத் கேட்கிறார். தனித்தமிழ் நாடு வேண்டுமென்று கேட்கவில்லை. சுதந்திரத் தமிழ் நாடு வேண்டுமென்று வாயினால் சொல்லவும் மறுக்கிறார் சம்பத். அவர் கூறுகிற முண்டத்தை தன்மானமுள்ள தமிழன் எவனும் ஏற்றுக்கொள்ள முடியாது.

......*

சி. பா. ஆதித்தன்,
"தமிழ்க்கொடி"—கேள்வி பதிலில்

இலக்கியத் தென்றல்! கருத்து முரசம்!!

‘முக்கனி’

ஆசிரியர்
பன்மொழிப்புலவர் ப. சுந்தரவேலனுர்

பேராசிரியர்கள்: மயிலே சிவமுத்து, கா. பொ. இரத்தினம், கி. ஆ. விசுவநாதம், அ. மு. பரமசிவானந்தம், இராமநாதம் (இலங்கை) ஆகியோர் எழுதுகின்றனர்.

* * *

15-6-61-ல் வெளிவருகிறது

* * *

ஆண்டு சந்தா ரூ 3—00: விற்பனையாளர்கள் இதழ் ஒன்றுக்கு 50 காசுகள் வீதம் விண்ணப்பிக்கவும்.
8, வேலர்ஸ் ரோடு, சென்னை-2.

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

நிதிபற்றி? எங்கே ஆந்திரத் தோழர்கள் அளித்த பணம்?’, என்று. அதற்குச் சம்பத் சொன்னபதிலை அவர் மறந்துவிட்டாலும் அவரறிக்கை விடுத்த ஏடுகள் சொல்லும்!

“என்னுடைய அந்தஸ்து குடும்ப பெறுமானம் எதுவென்யது தமிழ் நாட்டுக்கே தெரியும்” என்ருர். நான் பெரிய இடத்து பிள்ளை—இந்த பணத்தையெடுத்தா நான் மாடிவீடு வாங்கப் போகிறேன்—எனக்கேன் இந்த பணம், என்று தென்னிந்திய பிர்லாவை போல் விடுத்தார் அறிக்கை. அப்படிபட்ட வீராதி வீரர், பெரிய இடத்துப்பிள்ளை. ‘பெறுமானம்’ உள்ள குடும்பத்து பிள்ளைக்கு அழகென்ன? 9000மோ 8000மோ ஏதாயினும் ‘இந்தா’ என்று தந்திருக்க வேண்டியதுதானே! அது மட்டுமல்ல, ‘கலியாண வீட்டில்’, ‘பெயர் வைப்பதற்கு’ என்று ஒவ்வொரு பேச்சாளரிடமும் கழகத்துக்கும் தேர்தல் நிதிக்கும் தோழர்கள் நன்கொடைகள் தருகிருர்கள். அண்ணு முதற்கொண்டு அறிவுடை நம்பிவரையில் அவரவரிடமும் அளிக்கிருர்கள். வாங்கிய அவர்கள் என்ன செய்கிருர்கள்? சரிதான்—பணம்தானே—கழகத்தில் ஒரு ஆள்தானே நம்மிடமிருந்தால் கழகத்திலிருப்பது போலத்தான் என்று தத்தம் வீட்டிலேயா, பூட்டி வைத்துக் கொள்கிருர்கள்—இல்லையே! வெளியூரிலிருந்தால் மணியார்டர் மூலமோ தலைமை நிலையம் வந்தால் நேரிலோ வந்து கொடுத்துவிட்டு தானேமறுவேலை பார்க்கிருர்கள்!! எனக்குத் தெரியும், சென்னையில் தேர்தல் நிதிக்கென லசூலித்த 3000 ரூபாய் பணத்தை சென்னை மாவட்ட பொருளாளர் தோழர் கபாலி எடுத்துக் கொண்டு எப்படி ஓடினர் தலைமைக் கழகத்துக்கென்று?

அவரைப்போல, கழக நிதிஎன்ருல், பொதுச் சொத்து, அது போய்ச் சேரவேண்டிய இடம் தலைமை நிலையம் என்கிற எண்ணம் ஏன் வரவில்லை சம்பத்துக்கு? இந்தி எதிர்ப்பு நிதிமட்டுமா—ஆந்திரத் தோழர்கள் அளித்த 1050 ரூபாய் தேர்தல் நிதியை ஏன் எடுத்துக்கொண்டு போகவேண்டும்? த தது க்குடியில் பொதுக் குழுக்கூடப் போகிறதென்றதும் டில்லியிலிருந்து பல மாதங்களுக்குப்பின்னர் அனுப்பி வைக்க வேண்டும? அப்படிச் செய்யலாமா! இவரை போல் கழகப் பணத்தை இவ்வளவு சாதாரணமாக எவரும் எண்ணுவார்களா!!

இப்படிப்பட்டவரா கழகத்தில் வேலை முறையில்லை, சரியான கடித போக்குவரத்து இல்லை என்று சண்டமாருதமென எல்லோருக்கும் அறிக்கைகள் விடுத்தார்.

‘செக்’ அனுப்ப ‘அன்ருேர் நாள்!) என்ன காரணம், பணம் இவர் கணக்கில் பாங்கிக்குப் போவதற்கு? பொது பணமன்ருே! போடலாமே கொண்டுபோட தன் பெயரில் பாங்கியில்!!

கழகப்பொருளாளர் கருணுநிதியிடம் ஆயிரம் ஆயிரமாக அன்றும் பணம் கொடுத்தார்கள்—இன்றும் கொடுக்கிருர்கள். ஓடோடியும் சென்று ராயபுரம் இந்தியன் பாங்கியில கழகத்தின் பெயரால் ’வரவு’ வைத்துவிட்டுத் தானே மறுவேலை பார்க்கிருர்! எந்தத் தோழர் போய்க் கேட்டாலும் எடுத்துப்போட்டு, “இதோ பார்!” என்று சொல்லும்படி இருக்கிறதே அவருடைய செயல்!! அந்தப் “பயம்” ஏன் வரவில்லை சம்பத்துக்கு? நம்முடைய சமூகத்தில், பணத்தை எடுத்துக் கொண்டு போனவனை, மிக மிகக் கேவலமாகமதிப்பார்கள்.“அதோ போரானே! அவன் யார் தெரியுமா? கூட்டுறவுப் பண்டகசாலையில், மோசம் செய்தவன்”, “இதோசாது, சமரசஞானி போல் வேடம் போடுகிருனே இவன் நம்பிக் கொடுத்த பணத்தை மோசம் செய்தவன்.”

“மூலைக்கடையில் எடுபிடியாயிருந்த இவன் என்ன செய்தானும்தெரியுமோ? எட்டணுவை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டானும்!”, “சண்டைப் பிரசண்டமாக பேசும் இந்த ஆளின் யோக்கியதை தெரியுமா? பலபேர் சேர்த்துக் கொடுத்தக் கட்சிப் பணத்தைக் கபளீகரம் செய்தானும்!!”, இப்படித்தான் பேசுவர். நம்முடைய சமூகம், பணவிஷயத்தில் நாணயதவறுகளை, நயவஞ்சகமாக நடந்தவனை, நாய்க்குணக் படைத்த நடந்தவனை, மிக மிகக் கேவலமாகவே மதிக்கும். அந்தா கேவல்த்தையும் பொருட்படுத்தமமல், தன்னுடைய மாடிவீட்டு மகிமையைக் காட்டி மதைத்திடுவர் பூர்ஷ்வாக்கள்! பெரிய மனிதத்தனம்—பெறுமானம்—அந்தஸ்து என்கிற புனுகு பூச்சு புண்ணை மறைக்கும் என்பது அவர்கள் எண்ணம்!! அதனுல் அதட்டிபேசுவர்—சமூகம்தான் நம்மைச் சீமான் என்று ஒத்துக்கொண்டு விட்டதே. இந்தச் ‘சில்லரையை’யா சிந்திக்கப் போகிறதென்று இப்படியெல்லாம்‘ சில்லரை’களைச் சேர்த்துத்தான், இன்றைய சமூகத்தில் பலர் பெரிய மனிதர்களாகிப் பேரெடுத்துக் கொண்டு விளங்குகிருர்கள்-பண விஷயத்தில்!! காசு பேசும், மாசில்லாத மணிகளாய் நாம்உலவலாம் என்கிற மனே தைரியம் அவர்களுக்கு நீங்கள்கூட பார்க்கலாம்---பெரிய பெரிய மோசடிகளைச் செய்த பணக்காரர்கள், அவர்தம் திறமைக்காகப் பாராட்டப்படுவதை! ஆனுல் ஒரு சிறு ஏழை, காய்ந்த கொல்லையில் கிடந்த ஒரு சுள்ளியை எடுக்கட்டும், ஊர் மணியக்காரர் அவனை ஊரைச் சுற்றி வலம்வரச் செய்வார்! இந்த ஊதாரி நெறிக்குச் சாவுமணி யடிக்கச் செய்யும் சமுதாயம் மலரவே நாம் பாடுகிறேம் நாம் படும்பாடு நலன் தரும் வரையில் பசுத்தோல் போர்த்திய புலிகள், நயவஞ்சக நாசங்கள், நாட்டில் நடமாடுமென்ருலும், அந்தப் பூர்ஷ்வா’ மனப்பான்மை அப்படியே கொஞ்சங்கூடக் குறையாமல் அன்பர்சம்பத்திடம் இருப்பது தான் நமக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருக்கிறது!!

இல்லையென்ருல், பேசுவாரா, குமாரபாளையத்தில்— “நாங்கள் பணத்தை எடுத்துக் கொண்டு வந்துவிட்டோமென்ருல் தி.மு.கழகத்தினர் அதுபற்றி மேடையில் பேசவேண்டியதில்லை. கோர்ட்டில் வழக்குப் போட்டு வாங்கிக்கொள்ளலாம்!”— என்று. கோர்ட்டில் வழக்குப் போட வேண்டுமாம்! குணவான் சொல்கிருர்!! “பல பயங்கர இரகசியங்கள் வெளிப்படும்,” என்று, அதே சமயம், பூச்சாண்டியும் காட்டுகிருர். புவி திருத்தக் கிளம்பியிருக்கும் இப்புலி!! கோர்ட்டுக்குப் போகநமது தலைமைக் கழகத்துக்குத் தெரியாதா—அதென்ன போக முடியாத இடமா? ‘நம்மிடம் வாதாட

(10-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை கிடைக்கவில்லை என்பதற்காக தானே தலைவனுக இருப்பதற்கென்றே ஒருகட்சி வைத்து நாம்-தமிழர் என்று சத்தியம் பண்ணிக் கொண்டிருப்பவர் அவர். அவரிடம் சம்பத் போனுல் என்ன நடக்கும்.

அதிலும் பயனில்லை என்று கண்டவுடன் கடைசியாக, காங்கிரசை ஒழிக்க காமராஜரை ஆதரிக்கிறவரிடமே (பெரியார்) போய் விட்டார்.

திராவிடநாடு கேட்டுவிட்டு, வெங்காய நாட்டிற்போய் நிற்கிறவர் ஈரோட்டார்.

திராவிடநாடு கிடைக்காது—தமிழ்நாடும் வராது—தேசியம் என்பது வெறும் பித்தலாட்டம்—தேசியக்கொடி ஒருகோவணத்துக்குச் சமம்.என்பது தந்தையாரின் கருத்து.

ஆனுல் திராவிடநாடு வெறும் மோசடி என்கிறவர் திரா

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

அறப்போர் வளர அன்புடன் ஆண்டு சந்தா அனுப்பிய உடன் பிறப்புக்கள் பெயர்களை கீழே தந்துள்ளோம்.

ஆசிரியர்

32. எஸ். ஆர். கழனிச்சாமி, சன்னம் பாளையம்.
36. ஈ. ஆர். பன்னீர்செல்வம், மதுரை-1
37. வெ. குமரேசன் ஆம்பூர்.
38. சா. கோவிந்தராசன் தொண்டல் வள்ளுவக்குடி.
39. நெடுமாறன் திருப்புகலூர்.
40, கி. இராமராசு—உளிபுரம்.

விட்டில்! மின்மினி!!

திராவிடமா பகற்கனவு? உரைப்பவர்யார்?
திராவிடத்தை அடகுவைக்கும் துரோகக்கூட்டம்!
வராதென்று வசைபாடத் துணிந்து விட்டாய்
வந்தவழி வளர்ந்தவழி மறந்துவிட்டாய்!
சுருமீனை விழுங்கிடுமோ கிணற்றுமீன்கள்
சுதந்திரம்நம் இதயகீதம்! விழிதிருப்பு!
பராரிகளாய்ப் பஞ்சைகளாய் நலியுந்தோழர்
புதுவாழ்வு பெறுவதற்கு ஒளிதான் அண்ணு!

சென்றவர்கள் தூற்றுவதால் துவளமாட்டோம்
செப்பிவந்த கொள்கைமாறி வித்தைகாட்டோம்!
மென்மலரில் மணமில்லை என்பார்தம்மை
மேதினியின் சரித்திரமே சுட்டிக்காட்டும்!
என்னருமைத் திராவிடனே! அறிஞர்அண்ணு
ஏற்றிவைத்த ஒளிவிளக்கு நமக்கிருக்கச்
சின்னவிட்டில் மின்மினியா சிதைத்துப்போடும்?
சிந்தனையின் பேரறிஞர் வழிநடப்போம்!

சா. சதாசிவம்

காசாலே...

வக்கீல்கள் இல்லையா-இல்லை. நாம் இப்படியே விட்டு விடுவோம் கோர்ட்டுக்கே போகமாட்டோம் என்றேனும் உறுதியுண்டா? எதுவும் இல்லை! எனினும், தோழர் சம்பத், மிரட்டுகிறார்—

இவர்கள் கோர்ட்டுக்குப் போவதற்கு முன்னால், இப்படியொரு போடு போட்டு வைப்போமே என்று! பயங்கர இரகசியங்கள் உள்ளனவாம் — கூறட்டும் தைரியமிருந்தால்—மக்கள் மன்றம், கோர்ட்டைவிட பெரிய மாமன்றம்!! அங்கே கொட்டட்டுமே குணாளர் அந்த இரகசியங்களை. அடுக்கட்டுமே, அடுக்கடுக்காய், அந்த இரசசியங்களை. சம்பத்துடைய சித்தப்பா அவர்கள் இப்படித்தான் எழுதுவார். முன்பெல்லாம், "இந்தக் கண்ணீர்த் துளிகளுடைய நயவஞ்சகம், சூதகப்புத்தி, கொலை பாதகம் பற்றிய விபரங்களை விரைவில் நாம் அம்பலமாக்க இருக்கிறோம். தோழர்களே! கொஞ்ச காலம் பொறுத்திருங்கள்," என்று.

கொஞ்சகாலமல்லநீண்டகாலம் நாமும் காத்திருந்தோம். இது நாள் வரையில் ஏதும் கண்டோமில்லை!! ஒரு வேளை அய்யாவின் அந்த பாணியைப் பின்பற்ற சம்பத் எண்ணுகிறார் போலும்—பயமுறுத்துகிறார், பயங்கர இரகசியங்கள் வரப்போகின்றன உஷார்! உஷார்!! என்று.

இவருடைய அச்சுறுத்தலுக்காகவோ, இப்படிப்பட்ட அடாவடி பேச்சுக்களுக்காகவோ அல்ல, இந்தச் சீமான் வீட்டு பிள்ளையின் மீது, இன்னும் வழக்கு போடாமலிருப்பது, அதற்கான ரசீதோ, பத்திரமோ இல்லையே என்பதால் அல்ல. மாநாட்டுக்குக் கட்டணம் செலுத்திய ஆயிரக்கணக்கான பேரும், இவர்மீது வழக்கு போடலாம். நான் செலுத்திய எட்டணாவை எடுத்துக்கொண்டுபோய் வட்டாயென்று! தலைமைக்கழகத்துக்கு நிதி அனுப்பிய எவரும் போடலாம் வழக்கு!! இதற்கொன்றும் பிரமாதமான செலவோ, மூளை ஆராய்ச்சியோ தேவையில்லை.

என்றாவது ஒருநாள் வழக்கு வராமற் போகாது. அவர் பதில் சொல்லும்படியான அந்தக் கட்டம் வரவே செய்யும், இந்தவீராதி வீரரின் நாணயத்தை, கைசுத்தத்தை. நாடு அறியட்டும் என்றுதான் இப்போது விட்டு வைத்திருக்கிறோம்! எமது பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா எதையும், காரணமில்லாமல் காலந் தாழ்த்தமாட்டார்—சமயம் வரும் போது, செய்ய வேண்டியதைச் செய்யாமலும் விடமாட்டார்! அதுவரையில். அன்பர் சம்பத்து அவர்களே, ஆனந்தமாக எதை வேணடுமானாலும் பேசுங்கள்—கண்ணதாசன் கற்பனையில் வல்லவர், அவரிடம் கேட்டு ஒத்திகை பார்த்துவிட்டே செய்யுங்கள்—அதனால் எங்களுக்கொன்றும் நஷ்டமில்லை! திராவிட முன்னேற்றக்கழகம்—ஒன்றும் அலாவுதீன் குகையல்ல—இங்கே இரகசியங்களிருக்க! தி. மு. க. ஒரு திறந்த நூல்! திருவிளக்கு! மாசுமருவற்றது! இதை மககள் மன்றம் அறியும்! அம்மன்றம் உமது நாணயத்தை எடைபோட்டுக் கொண்டுதான் உள்ளது! நீர், எதற்குப் பதில் சொன்னாலும், பணத்தை எடுத்துக்கொண்டு போனதற்கு மட்டும் எந்தச் சமாதானமும், எப்போதும் சொல்ல முடியாது. அப்படியொரு உண்மை இந்த உலகுக்குவிளங்க—பூர்ஷ்வா குணம் தெரிய—நீர் கொண்டுபோயிருக்கும் தொகை கூட சாதாரணம்தான்! இருக்கட்டும், இந்தப்பழி உமக்கு என்றே உங்களைப்போல 'பெறுமானம்!' என்று பேசி அரசியலை அங்காடி ஆக்கிடுவோரின் போககு கண்டு துடிக்கும் எம் போன்றோர் மனம் எண்ணும்—எனினும், வரும் வழக்கு ஒருநாள்! வரவேற்கத் தயாராயிருங்கள்!!

—0—

புதிய சம்பத் !

'கருமுகில்'

காட்டிக் கொடுத்தனைக் கழகத்தை; அதைக்
கடமையென் றெண்ணிக் காத்திருந்து
வேட்டு வைத்தனை விவேகமின்றி; நாளும்
வேற்றார் விரித்த வலைப்பட்டு
வீட்டைக் கொளுத்திட ஆசைப்பட்டு நடு
வீதியில் ஓடினை; திராவிடமாம்
நாட்டுப் பிரிவினைக் கனவென்றாய்; இனி
நம்புவார் யாருனை நானிலத்தில் ?

'கோட்டை' இருப்பவர் குதித்திடவோ இன்று
குழப்பம் விளைத்துக் கோடினாய்;
கோட்டை விட்டனைக் கூர்மதியை இனிக்
கொள்கையும் கோட்பாடும் ஏதுனக்கு.
தேட்டை யிழப்பினும் திருப்பிடலாம் கொள்கைத்
தெம்பினை இழப்பின் தேடரிதாம்;
மேட்டில் வாழ்ந்தனை மிடுக்குடனே இன்று
மீளாத் துயரினில் மிதக்கின்றாய் !

—∘—∘—∘—

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

நெருங்காமல் வாழ்ந்தனர். இது எங்களை வசீகரித்தது. அதனால், ஹிம்லர் உத்திரவுப்படிநான் அங்கேரிக்குப் போனேன்!

1944 மார்ச் 19ந் தேதி விடியற்காலை புடாபெஸ்டுக்கு, ஹிம்ளர் உத்திரவுப்படிச் சென்றேன். புறப்படும்போதே, விமானபடையெடுப்புக்குச் செய்யப்படும் எச்சரிக்கையைச் செய்தவண்ணமே சென்றோம். திடீரென என்கூட வந்த அதிகாரிகள், என் காரைச் சுற்றிக்கொண்டு ஆடினர். விஷயம்என்னவென்றால் அன்றுதான் என்னுடைய 38-வது பிறந்தநாள்! புடாபெஸ்ட் நகரத்தில், ஒரு ஓட்டலில் என் ஆபீசை வைத்துக் கொண்டேன். யூதர்களைச் சேகரித்தேன். ரயில் கிடைத்தால் ரயில், வண்டி கிடைத்தால் வண்டி, இப்படி ஏற்றி அனுப்பினேன். கப்பல் வழியாகவும், போலந்திலிருந்த ஆஸ்ட்விச்சுக்கு அனுப்பினேன்! இதைப்போல கிட்டதட்ட 5லட்சம் யூதர்களை! அங்கேரியில்திரட்டி ஆஸ்ட்ச்சுக்கு அனுப்பினேன். இவர்களெல்லாம் ஆஸ்ட்ரிச்சில் "முடிவா"னர்கள் ஆஸ்ட்விச்சில் ரஷியர்கள் நுழைந்தபோது, கொல்வதற்காக கெட்டோவில் நாங்கள் வைத்திருந்த மீதி யூதர்கள் விடுவிக்கப் பட்டார்கள்!!

ஆஸ்ச்ட்விச்சுக்குள் ஒவ்வொரு நாளும், ரயில் வரும்போதும், பத்தாயிரக்கணக்கில் அங்கேரியூதர்கள் கொண்டுவந்து இறக்கப்படுவார்கள். கணக்கெடுப்பதும், கெட்டோவுக்குள் தள்ளுவதும் எவ்வளவு சிரமம் தெரியுமா! ஒருநாள் அங்கேரியிலிருந்து திரும்பியதும்ஆஸ்ட்விச் கேம்புகளைச் சுற்றிப் பார்த்துவரக் கிளம்பினேன். என் கீழதிகாரி, ஒரு இடத்துக்கு அழைத்து போய்க் காட்டினான். அப்படியொரு காட்சியை உலகில் யாருமே கண்டிருக்க முடியாது! அப்பப்பா, எவ்வளவு பிணங்கள்!! இவ்வளவு பிணங்களுக்கும் புதைகுழிகளை வெட்டி புதைப்பதற்கு ஆட்கள்போதாதாம் மாதக்கணக்கில்ஆகுமாம்உண்மைதானொன்று இரண்டா நச்சுவாயு அறையின் மூலம், மூன்று நிமிடத்தில் ஆயிரக்கணக்கில் பிணம் விழுகிறது. அதை எப்படி அடக்கம் செய்வது? பிணமலையைக் கண்டேன்! பிள்ளைகள்—பெண்கள்—வயோதிகர்—வாலிபர். எனக்கு, பெர்லினில் சாகத் துடித்த ஜெர்மானியக் கிழவன், கிழவி நினைவு வந்தது. சமாளித்துக் கொண்டேன்! என் கீழதிகாரி, அந்தப் பிணமலையின் மீது, பெட்ரோல் போல ஏதோஒன்றை ஊற்றினான் கொளுத்தி விட்டான். அய்யயயோ! அந்த நாற்றம்! அதைவிட வேகும் இறைச்சிபோல், சிதறியும் உருண்டும் வழிந்த மனிதச் சதைகள்! இப்போதும், எனக்கு அது நினைவிலிருக்கிறது! பிணமலை—அது எரிந்த கோரம்! அப்பப்பா! என்ன நாற்றம்!!

(தொடரும்)

(-9ம் பக்கம் தொடர்ச்சி)

விடக் கழகத் தலைவராகத்தான் இன்னம் இருக்கிறார். திராவிடத்தின் பெயரால்தான் கழகமும் இருக்கிறது.

திராவிடநாடு சம்பத்துக்கு வேப்பங்காய்-இன்று.

ஆனால் தேசியம் அவருக்குச் சர்க்கரைப் பொங்கல்.

திரு. அண்ணாதுரையின் திராவிடநாடு— சம்பத்துக்குப் பிடிக்காது.

சம்பத்தின் தேசியமும், அண்ணாதுரையின்திராவிடநாடும் பெரியாருக்குப் பிடிக்காது.

தேசியத்தையே பித்தலாட்டம் என்று சொல்கிற சம்பத்-

திராவிடநாடுஒருமோசடி என்று சொல்லுகிற சம்பத்—

திராவிட கழகத்திற்குள் நுழைகிறாரே' நுழையலாமா?

இங்குதான் அவருடைய சுயரூபத்தைக் காட்டுகிறார்.

அப்படி-இப்படி என்றெல்லாம் சொல்லி கடைசியில் ஈரோட்டுக்கே போய்விடுவது என்ற திட்டத்தின் முதலெடுப்புகள்தான் இதெல்லாம் என்பதுஇப்பொழுது தெரிந்து விட்டது.

இதை அவர் இவ்வளவு கஷ்டப்பட்டுக் காட்டியிருக்க வேண்டியதில்லை. ஆரம்பத்திலேயே பச்சையாகச் சொல்லிவிட்டுப் போயிருந்தால்எவரும் அதைப்பற்றியே பேசி இருக்கமாட்டார்கள். அப்படிப் போயிருந்தாலும் சம்பத்தைப் பொறுத்தவரை தவறுமில்லை,

ஏனெனில்,

பெரியாருக்கு வயதாகிவிட்டது வாரிசு இல்லை-சம்பத்தைத் தவிர.

காமராஜரை ஆதரிப்பதன் மூலம், காங்கிரஸ் இதர வட்டாரங்களிலிலிருந்து அவருக்கு எத்தனையோ வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. அவைகளை பெரியாருக்குப்பிறகு வாரிசு விடாமல் வாங்கி வகிப்பதற்கு சம்பத்தைத் தவிர வேறு யாரிருக்கிறார்கள்?

இந்த வகையில் சம்பத்தைக் குறை சொல்ல முடியாது.

இந்த லாபத்தோடு அவர் நின்று கொண்டால் நல்லது! அதைவிட்டு வாரத்துக்குஒருகருத்துக்களை வெளியிட்டு கட்சி பிரித்து மக்களை இரண்டுங்கெட வைப்பது அவருடைய சொந்தத்துக்கு தற்காலிக சாதகமாக இருக்கலாம். ஆனால் அது நாட்டுக்குச் செய்யும் சேவையாகாது.

அவர் சொல்லுகிற கொள்கையும், உண்டாக்கி இருக்கிற கட்சியும், எதிர் காலத்தை தோன்றும் போதே இழந்து விட்டவை என்பதை அடுத்த அலையில் விவரிப்போம்!

அ. க. க.

தமிழரும் ஆந்திரரும்

8

என்று சரித்திரமும் வழங்குகின்றது. இது கி. பி. 1511-ல் நடந்ததென்று கூறுவர். இச்செய்தி அடியில்வரும் தொண்டை மண்டல சதகச் செய்யுளாலும் அறியதக்கதாம்.

“தாளாண்மை யுள்ள புகழ்—
கிருஷ்ணராயன் சமுகத்திலே
வேளாண் மகளிரைப் போலே
—விநோதித்து வேடங்கொண்டு
கோளேர் வயிரியர் கூத்தாடத்
—தங்கள் மிடிமையெண்ணி
வாளா லவருயிர் மாய்த்தன்
—ளுரேதொண்டை மண்டலமே”

இனி, அடுத்த வடமலையார் என்ற அமைச்சர், இரு சமய விளக்கம் பாடியவரும், கிருஷ்ண தேவராயர் சிம்மராத்திரியில் நாட்டிய ஜயஸ்தம்பச் செய்தி கூறிய வருமாக மேலே குறித்த அரிதாசரின் தமையனுராவர். இவரையே முன்கூறிய தத்துவப்பிரகாசர் ‘அரிய வடமலையாராணை’ என்று

மு. இராகவையங்கார்

குறிப்பிட்டதூஉர் என்க. அவற்றை இங்கு விரிப்பிற் பெருகும்.

இனி, கிருஷ்ண தேவராயர் காலத்துக்குப் பின்பு அவர் சகோதரராய் ஆட்சி புரிந்த அச்சுத தேவமகாராயரும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவரே. பாகவத புராணம் பாடிய நெல்லிநகர் அருளாளர் இவரால் அபிமானிக்கப்பட்டவரென்றெ தெரிகின்றுர்.

இவ்விராயரது பிரதி நிதியாய்த் தென்னுட்டில் வெல்லப்படாத பகுதிகளையும் வென்று ஆட்சி புரிந்து வந்தவர், விட்டலதேவ ராயர் என்பவர். இவருடைய சாஸனங்களில் வீரப்ரதாப மகா மண்டலேசுவர ராமராஜ திம்மராஜ விட்டலதேவ மகாராஜா’ என்று இவர் சிறப்பிக்கப்படுவர்.

இவர், இராயராட்சிக் கடங்காதிருந்த கேரள தேசத்தை வெல்லற்கு அதன் தலைநகராகிய அனந்தசயனத்தின் மேல் கி. பி. 1453-ல் படையெடுத்துச் சென்றனரென்றும், இவரது சேனைகள் தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே நைஸாம் ராஜ்யத்து முதுகல் வரையுமுள்ள பிரதேசங்களை வென்றடிப்படுத்தின என்றும் சொல்லப்படுகின்றன, இவர் கன்னியாகுமரி வரை படையெடுத்துச் சென்று வென்றனரென்பதற்கேற்ப, அக்குமரிப் பக்கத்துச் சுசீந்திரம் கோயிலிலுள்ள சாஸனமொன்று, கொல்லமாண்டு 722-(கி. பி. 1546-47)ல் இவர் பிறந்த நாளன்று, அர்ச்சனை நடத்தி வருவதற்கென்று, அந்நாட்டரசனுகிய பூதலவீ ரராமவர்மாவால் சில பொருள்கள் தானமளிக்கப்பட்டதைக் கூறுகின்றது இங்ஙனம், விட்டலதேவராயர் கன்னியாகுமரியை நோக்கி படையெடுத்துச் சென்றதையே, அப்போதிருந்த பாண்டியனொருவனும்—

“தொட்டி லிருக்கத்
தொடங்கிய நாண்முதலா
அட்டதிக்கு நின்குடைக்
கீழாயிற்றே—விட்டலையா
தன்குமரி யன்றித்
தனிக்குமரி கொள்ளா நீ
தென்குமரிக்
கேகுவதென் செப்பு”

என்று பாடியிருக்குஞ் செய்தி, மிதழ் நாவலர் சரிதையாற் றெரியும். இதனுல் இவ்விட்டல தேவரும் தமிழறிவும் அபிமானமும் உடையரா யிருந்தவர் என்பது பெறப்படும். இவ்வாறே, வேறு ஆந்திரத் தலைவர் சிலரும் உளர்

இங்ஙனம் தென்னுட்டின் சநாதனதர்மங்களையும் தர்ம ஸ்தாபனங்களையும் பாதுகாத்து வந்து அதன் பெருவாழ்த்துக்கு உரிய தாய்விளங்கியமகாராஜ்யமானது 1565-ல் நடந்த தலைகோட்டை பெரும்போரிலே நிலைகுலைந்து வீழ்ந்தது. இது தக்ஷிண தேசத்தின் பெருந் துரதிர்ஷ்டமேயாகும். இவ்வேகாதிபத்தியம் நிலைகுலையவே இதன் பிரதிநிதிகளாய்த் தென்னுடாண்ட தலைவர்களும் வலியவர்களும், சிறியவும் பெரியவுமான இராஜ்யங்களை ஆங்காங்குத் ஸ்தாபித்துக் கொண்டனர். அப்படி ஸ்தாபிக்கப் பெற்றவற்றுள் மதுரைநாயக்க ராஜ்யத்தைக் குறிப்பிடல் தகும். பாண்டியர்கட்கு பின்பு இம்மதுரையம் பதியைத் தலைநகராகக் கொண்டு பல தலைமுறைகளாக விஜயநகர வேந்தரின் பிரதிநிதிகளாய் ஆட்சி புரிந்துவந்த இவ்வரசர்களுக்குள்ளே திருமலை நாயக்கரே (1623—1659) சிறந்தவர். பெரும்புகழாளராகிய இவர் காலத்திற் கோயில்களும குளங்களும் செழித்ததும், மதுரையே புதுப்பிககப்பட்டதும் பலரும் அறிந்தவை. இவர் புகழ் தமிழ்ப் பெரும் புலவர்களாலும் சிறப்பிக்கப்பட்டது. குமரகுருபரமுனிவர், மீனாட்சியம்மை பேரிற்பாடிய பிள்ளைத் தமிழை இவ்வரசர் திருமுன் அரங்கேற்றினரென்பதும், அப்போது “தொடுக்குங் கடவுட் பழம் பாடல்” என்ற செய்யுள்வர அதன் அருமைப்பாட்டுக்கு வசப்பட்டு மீனாட்சியே ஒரு பெண் குழந்தை வடிவாக சபையில்எழுந்தருளியிருந்து கேட்டு உவந்து மறைந்தனளென்பதும் கன்ன பரம்பரைச் சரித்திரம். அம்முனிவர் இயற்றிய மீனாட்சியம்மை குறம் என்ற மற்றொரு பிரபந்த விறுதியில்—

“நீர்வாழி தென்மதுரை
நின்மலனு ரருள் வாழி
கார்வாழி யங்கயற்கட்
கண்ணிதிரு வருள்வாழி
சீர்வாழி கச்சிநகர்த்
திருமலைபூ பதிவாழி
பேர்வாழி யவன் செல்வம்
பெரிதூழி வாழியவே”

என்று அம்முனிவர் திருமலை நாயக்கரை மனமார வாழ்த்தலும் அறியத்தக்கது. நாயக்கவரசர் பூர்வத்திற் காஞ்சீபுரத்தில் வாழ்ந்தவர் என்று சொல்லப்படுவதால், கச்சிநகர் திருமலை பூபதி’ எனக் கூறப்பட்டனா என்க. இவர் முன்னேரிள் ஒருவராகிய கிருஷ்ண வீரப்பர் (கி. பி. 1572) என்பவரும் இவ்வாறே கூறப்படுதலை, “அன்னவனரசர் சூழுங் கச்சிவீ ரப்பனென்னும்—மன்னவன்” என்னும் சுந்தர பாண்டியப்பாயிரத் தொடராலும், ‘கதிக்கும் பரமன்னர் பொன்னுர் முடிகளைக் காலிலெற்றி—மிதிக்குங் கடாசலத் தான்கச்சி வாழ்கிட்ண வீரப்பனே” என்ற மதுரைத் திருப்பணிமாலைத் தொடராலும் அறியலாம். நிற்க, நாயக்கவரசர்கட்கு உள்ளடங்கிய தென்னுட்டு பாளையப்பட்டுகள் 74-ல், பாதிக்குமேல் தெலுங்கத் தலைவர்கள் ஆட்சியைச் சேர்ந்தவை. இத்தலைவர்களிற் பலர் தமிழறிவுடையராய்த் தமிழ் புலவர்களை ஆதரித்தவர்களே. கூளப்பநாய்க்கன் மேல் அமைந்த விறலி விடுதூது போன்ற சில்லறைப் பிரபந்தங்கள் சில இன்னோர் காலங்களில் எழுந்தவைகளாம். இத்தலைவர்களிலே எட்டயபுரத்தரசர்கள் தமிழறிவும் ஆதரவும் மிக்குடையவர்களாயிருந்தனரென்பது, அவர்களைப்பற்றி புலவர்கள் பாடிப் போந்த தனிப்பாடல்களினின்று நாம் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாந்திரத் தலைவர்களும் வலிமை குன்றிய சில காலத்திற்கெல்லாம், இவர்களையெல்லாம் வென்று கீழ்ப்படுத்தி மகமதிய ராஜாங்கம் மேலோங்கியது. அமைதிக்கேஇடமின்றியொழிந்த இக்காலங்களில், தமிழ் வளர்ச்சிக்கு ஆதரவில்லையென்று நாம் துக்கப்பட நியாயமே இல்லை. பிறகு, ஆங்கில சாம்ராஜ்யம், நம் சென்னையிலிருந்து தொடங்கிப் பரதகண்ட முழுதும் வியாபிக்கவே, எங்கும்போல நம் நாட்டிலும் அமைதியும் நல்வாழ்வும் ஏற்பட்டுள்ளமை நாம் நன்கறிந்தது.

தமிழ்மக்கள் ஆந்திரதேசத்தை ஆண்டகாலங்களிலும் ஆந்திரமக்கள் தமிழகத்தை ஆண்ட காலங்களிலும் பாஷைநடையுடைகளாலும் மனோபாவங்களாலும் அவ்விருவரும் பெரிதும் கலப்புற்றிருக்க வேண்டுமென்பது சொல்லாமலே அமையும். ஆந்திர கவிகளில் நூற்றுக்கணக்கானவர், தமிழகத்தினின்று ஆந்திரதேசத்துக் குடியேறி அரசர் முதலியோரால் சிறப்பிக்கப் பெற்ற தமிழரே என்று, சில்லாண்டுகட்கு முன் மதுரை மாநகரிற்கூடிய ‘ஆந்திர ஸாஹித்திய பரிஷத்’ என்ற மகா சபையில் அதன் அக்கிராசனுதிபதி வெளியிட்டனர். இச்செய்தி அவ்விரு நாட்டார்க்கும் இருந்த சம்பந்தத்தை நன்கு விளக்குவதன்றோ? இவ்வாறே சில நூற்றுண்டுகளாகத் தமிழகத்திற் குடியேறிவந்த ஆந்திர மக்களுள்ளே பெரியோர்களும் வித்வான்களும் பலர் இங்கும் விளங்கி வந்தனர், இவர்களால் தென்னுடு அடைந்த பயன்களிலே, தியாகையர் என்ற மகானுல் கர்நாடக சங்கீதத்துக்கே ஒரு புதுத் தோற்றமும் கிளர்ச்சியும் உண்டான செய்தியை ஈண்டுக் குறிப்பிடல் தகும்.

ஆங்கில சாம்ராஜ்யத்தின் மாகாணப் பிரிவுகளிலே திராவிட மொழிகள் என்று கூறப்படும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற பெரும் பாஷைகள் வழங்குந் தேசங்கள் ஒரு தொகுதியாக அமைக்கப்பட்டுள்ளன. இத்தேசப் பிரிவைச் சென்னை மாகாணம் என்று இடவமைதி பற்றிப் பெயர் கூறுவதினும், ‘திராவிட மாகாணம்’ எனப் பாஷையமைதியைக் கொண்டு வழங்குவது மிகவும் பொருந்துவது எனலாம். பாஷைகள் வழங்கும முறையாகவே தேசங்கள் பிரித்தாளப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி சில காலமாக ஆந்திர மக்கட்குள் அதிகமாக உண்டாயினும், இப்போது அமைந்துள்ள மாகாணப் பிரிவு, பூர்வ சரித்திர முறைக்கு ஒத்ததாய் மேற்குறித்த நான்கு திராவிட மக்களையும் நெடுங்காலம் ஒரு சேர வைத்து ஒற்றுமைப்படுத்தி வந்திருக்கிறதென்பதுதிண்ணம். இவ்வொற்றுமைக்கு, இன்று அக்கிராசனம் வகிக்கும் நம் வித்யாவிலாகா மந்திரியாரும் ஒரு சிறந்த சாட்சியாவர். சென்னை மாகாணத்தின் வடகோடி நாட்டினராகிய இவர், செந்தமிழ் நாட்டின் தலைநகரில் அமைந்த தமிழச் சங்கத்தை அபிமானித்து, இன்று இதன் வருஷக் கூட்டத்தின் தலைமை வகிப்பது தான் மேலே கூறிப்போந்த சரித்திரங்களை ஞாபகப்படுத்துகின்றது. ஆந்திரத் லைவர்கள் தமிழை அபிமானித்தது புதியதன்று என்பதும், இதுபோலும் சம்பந்தம் என்றுமிருந்து பரஸ்பரம் பாஷை முதலியவற்று[illegible] பேருதவி அமையவேண்டு[illegible] பதுமே இவ்வுபந்நியா[illegible] யான் இம்மகாசபையில் [illegible] படுத்தியதன் நோக்கம். [illegible] கைய தொடர்பு நீடுவாழ்[illegible]

—0—

கேள்வி பதில்

கே: அன்புடையீர்! தங்கள் மூலம் நான் தெளிவு பெற விரும்புகிறேன். என்னுடைய கேள்விகளுக்கு ஒன்றன் பின்னொன்ருக நீங்கள் பதிலளிக்க வேண்டும்.

தமிழ் வீரன்
காரைக்குடி.

(1) திராவிடநாடு, என்று கூறும் பகுதி எது?

ப: மலையாளம், தமிழ், கன்னடம், ஆந்திரம் எனும் நான்கு மொழிகள் பேசப்படும் இடம்.

* * *

(2) நீங்கள் சொல்லும் திராவிட நாடு சாத்தியமா?

ப: நண்பரே! பொதுவாழ்க்கையில், சாத்தியமானது, நல்லது என்று இரண்டு வழிகள் உண்டு. சாத்தியமானதைக் கேட்டுப் பெறலாமே என்போர்ஒருவகை. நல்லதை அடைவோம் எனப் பாடுபடுகிறவர் இன்னொரு வகை. பூரண சுதந்திரம் வேண்டுமென்று காங்கிரஸ் சொன்னபோது, சாத்தியமா, என்று காங்கிரசிலே சிலர் கேள்வி எழுப்பினர்கள். உங்களுக்கும் ஆட்சியில் பங்கு தருகிறேன்—சட்டசபையில் இருங்கள்—நீங்களும் நாங்களும் ஆளலாம் என்கிற "இரட்டை ஆட்சி முறை"யை வெள்ளையன் வலியுறுத்தியபோது. இதுதான்சாத்தியமாகப்படுகிறது, இதை நாம் ஏற்றுக் கொண்டால் என்ன என்று அவர்கள் உளமார நம்பினர்கள். அவர்களை, காங்கிரசில் மிதவாதிகள் என்றனர்கள். சாத்தியமா என்கிற கேள்விக்கே இடமில்லை, நியாயம் என்று நினைக்கிற ஒரு நல்ல லட்சியத்துக்காக நாம் பாடுபட வேண் வேண்டும் என்று நேரு முதலியவர்கள் முழக்கமிட்டு விடாமல் போராடினர்கள ... உதாரணத்துக்கு பாட்டாளி உழவர்கள், உழுகின்ற நிலம் தமக்குச் சொந்தமாக வேண்டுமென்று சொல்லும்போது சாத்தியமா இது என்றே, இப்போதுள்ள முறைகளை வைத்து எண்ணக் கூடும் சிலர். உண்மைதானே—உரிமையுடையவர்கள் அவர் தானே—என்று புதுயுகம் அமைப்போர் உணர்ந்து வலியுறுத்துவர். சாத்தியமா என்பதைவிட நியாயம் என்பதே முக்கியம். நாம் கேட்கிற திராவிட நாடு, சாத்தியமாகாது என்று சிலர் நினைக்கலாம். சாத்தியமானதைப் பெறுவோம் கேட்டு. வெற்றிகூட லாம். ஆதித்தனர் போன்றோர் கேட்கிற தனித்தமிழ்நாடுகூட அமையலாம். அப்படியமைந்துவிட்டால் மட்டும் போதுமா! அண்டைநாடுகள் என்கிற அளவில், இந்த மூன்று பகுதிகளோடும் நாம்ஒரு ஒப்பந்தத்துக்கு வராமல் வாழ முடியாது. ஆற்றுநீர், கனிவளம், அரிசி முதலியவைகளை இந்த நான்கு பகுதிகளிலும் பரிமாறிக் கொண்டுதான் வாழ வேண்டும். அதை, அரசாங்க அளவில் பேசித்தீர்க்கக்கூடாதா எனலாம். உண்மைதான்! அப்படிப பேசும்போது, எந்த உறவை வைத்து நாம் செல்வோமோ, அந்த உறவை தி. மு. க. இன்றே சொல்கிறது—அந்த உறவின் அடிப்படையில் மொழி வழிபிரிந்து, இன வழி கூடி வாழ்வோம் என்கிற கொள்கையின தி. மு. க சொல்கிற . இரண்டும் கிடைத்தால் போதும் என்பது ஒருவிதம் நான்குவேண்டும் என்றுகேட்பது இன்னெருவிதம் இரண்டுகேட்டு அதை வாங்கியபின் இன்னொரு இரண்டைக் கேட்கலாம் என்பதுஒருவிதம், நான்காக கேட்டு இரண்டு கிடைத்தால் அதை முதலில் பெற்றுக்கொண்டு, மற்ருெரு இரண்டுக்கு தொடர்ந்து பாடுபடுவது இன்னொருவிதம். எந்த வழியில் நீங்கள் பார்த்தாலும், திராவிடநாடு என்கிற கோரிக்கை. தூய்மையானது—நல்லது—ஒரே விதமாக வாழும் மக்களைக் கூட்டாகவைக்கக் கூடியது என்பதை நீங்கள் உணரலாம்.

* * *

(3) திராவிடநாடு என நீங்கள் கேட்கக் காரணம் ஆரியர் மீதுள்ள வெறுப்பால்தானே?

ப: அய்யய்ய! வடக்கேயிருப்பது ஆரியஸ்தான் — தெற்கேயிருப்பது திராவிடஸ்தான் என்று தி. மு. க. சொல்லவில்லையே!

சமூகத்துறையில் ஆரிய மதக் கோட்பாடுகள் திருமண முதற்கொண்டு வாழ்க்கையின் சகல துறைகளிலும் புகுந்துவிட்டதை எடுத்துரைத்து, அவையில்லாமலும் மனிதன் நிம்மதியாக வாழலாம் வருணச்சிரம தர்மம் போன்ற முறைகள் அந்த இந்த நூற்ருண்டுக்குத் தேவையில்லாதவைகள் என்பதை விளக்கவே ஆரியம்பற்றி நாங்கள் பேசுகிறேமே ஒழிய தனிப்பட்ட மனிதர்களை வெறுக்குமளவுக்கு வெறிகொண்டவர்களைக் கொண்டதல்ல, தி. மு. க.

*

(4) இந்திய உபகண்டத்துக்குள் வாழ்ந்த பழங்குடிகள், திராவிடர்கள். பிறகு நுழைந்தவர்கள ஆரியர்கள். ஆகவே, பிறகு நுழைந்தவர்களுடைய ஆதிக்கத்தை ஒழித்து, ஆதிக் குடிகளின் நாடாக இதை ஆக்க வேண்டும் என்பதுதானே உங்கள் நோக்கம்?

ப: பழைய நூற்ருண்டில், இப்படிச் சொல்லப்பட்டால், ஓரளவு ஒப்பலாம்! நுழைந்தவர்களும் ஒன்ருக மன ஒப்புரவோடு வாழ வேண்டிய அளவுக்கு நாட்டு வாழ்வில் கலந்துவிட்டதை நாங்கள் மறுக்கவில்லை. ஹிட்லரைப்போல இன பேதம் காட்டிப் பார்ப்பனர்களை விரட்டவோ, ஒழிக்கவோ நாங்கள் விரும்பவில்லை. இது பெரியாருடைய கொள்கை. இக்கொள்கை, இந்த நூற்ருண்டுக்கு ஒவ்வாது, ஒரு நாட்டுக்குள் வந்து குடியுரிமை வேண்டும்எவரையும்வாழ அனுமதிக்க வேண்டும்என்பதே, இன்றுள்ள மனித சமூகத்தினர்விரும்பும் பொதுநெறிஇதனுல்தான் இலங்கையில் வாழ விரும்பும்தமிழர்களுக்கு உரிமை தரப்படவேண்டும் என்று ஆசைப்படுகிறேம். இங்கே வந்து சிங்களவர் குடியேறி, நமது குடி உரிமையைக் கேட்டால், நாம் அளிக்கலாம் இது தவறல்ல! ஒவ்வொரு இன மக்களேஒவ்வொரு பகுதியிலும் வாழ வேண்டும்—வேறு ஒருவரும் நுழையக்கூடாது என்பது மனிதப் பண்புமல்ல; "உலகெல்லாம் வாழ்வோர் ஒரே மனிதர்கள்தான்!'! என்கிற உன்னத நெறிக்கும் ஏற்றதல்ல. ஆகவே நாங்கள் கேட்கும் திராவிட நாடு, திராவிடர் மட்டும் வாழ வேண்டும் என்கிற அடிப்படையிலல்ல. திராவிடர் என்பதற்கே தி. மு. க. தரும் விளக்கம்—திராவிட நாட்டின் குடிஉரிமை விதிகளை ஏற்றுக் கொள்ளும் எவரும் திராவிடர் என்பதே! ஜப்பானில் வாழ்வோர் ஜப்பானியர். அமெரிக்காவில் வாழ்வோர் அமெரிக்கர் என்பதுபோல நாட்டின் அடிப்படையில் வாழ்வோர் அனைவரும் திராவிடராக யிருக்கலாம்.

*

(5) திராவிட நாடு கேட்கும் நீங்கள் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்கிறீர்களே? வடநாட்டில் ஏழைகளே இல்லையா? அங்கேயும் முன்னேற்றமடையாத பகுதிகள் கிடையாதா? அங்கேயும் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லையா?

ப: நண்பரே! இந்தியாவைச் சுரண்டிக் கொண்டு போய் வெள்ளையன் கொழுக்கிருன் என்று காங்கிரஸ் முழக்கமிட்ட போது, இங்கிலாந்தில் ஏழைகளே யில்லையா? இருந்தார்களே! இன்னும் இருக்கிருர்களே!! அப்படியிருந்தும் அதை வைத்து ஏன் சொன்னர்கள்? இந்தியத் துணை கண்டத்திலிருந்து பஞ்சைக் கொண்டுபோன பிரிட்டிஷ் அரசு, வேட்டி சேலையாக நெய்து கொண்டுவந்து, இங்கே விற்று பணத்தை அங்கே கொண்டு போயிற்று. லங்காஷயர், மான்செஸ்டர், கிளாஸ்கோ போன்ற இடங்களிலிருந்த ஆலைகள் இதைச் செய்தன. இந்த ஆலைகள், எல்லா வெள்ளையர்களுக்கும் சொந்தமல்ல. அங்கிருந்த சில பிரபுக்களுடையது. ரஷியாவைப்போல் அந்த நாட்டில் ஏழையும் சீமானும் இல்லாத நிலை ஏற்படவில்லை. அதே போலத்தான். காங்கிரசாட்சியில், வடக்கில் ஏழையும் சீமானும் இல்லாத நிலை ஏற்படவில்லை. பம்பாயும், ஆமதாபத்தும், சில வடநாட்டுப் பிரபுக்கள் வசமே உள்ளன! அந்தப் பிரபுக்களின் கையில் சிக்கிச் சீரழியும் ஏழைகளும் அங்கேயிருக்கிருர்கள்!! அந்த ஏழைகளுக்காகப் பாடுபடுகிற ஒரு அரசு, டில்லியிலிருந்தால், இத்தனை நாளும் நிச்சயம் நம் கோரிக்கையைப்பற்றி ஆலோசிக்காமலிருக்காது. கன்சர்வேடிவ் சர்ச்சிலால் அல்ல, இந்திய சுதந்திரம் கிடைத்தது: தொழிற் கட்சி அட்லீயால் என்பதை மறந்திடலாகாது!! அப்போது எப்படி பிரிட்டிஷ் பிரபுக்கள் சுதந்திரம் கொடுப்பதில் பிடிவாதமாகயிருந்தார்களோ, அவர் தம்கட்டளைப்படி அந்த ஆதிக்கம் ஆடியதோ அதே போலத்தான் இப்போது வடநாட்டு பணக்காரர்களுக்காக—அவர்களால் ஆட்டி வைக்கப்படும் டில்லி அரசு—ஆடுகிறது! நம்முடைய கோரிக்கையை மறுக்கிறது!! எப்படி இங்கிலாந்து பிரபுக்களின் மார்க்கெட்டாக 'இந்தியா' இருந்ததோ அதே போல வடநாட்டு பிரபுக்களின் மார்க்கெட்டாக நமது பகுதி இருக்கிறது. வடநாட்டுக் காங்கிரசாருக்கோ, தெற்கேயிருக்கும் நம்மைப்பற்றிய கவனம் வருவதில்லை. வடக்குக்கு வேண்டிய அணை, தேக்கம், முதலிய சட்டங்களை போட்டுக் கொள்கிருர்கள்இதனுல்வடக்கு வளருகிறது என்கிறேம்! காங்கிரஸ் அரசு, வடக்கிலுள்ள ஏழைகளையெல்லாம் சீமான்களாக்கி விட்டது என்று அர்த்தமல்ல. அப்படியொரு சமதர்ம எண்ணமும் கிடையாது, காங்கிரசுக்கு. வடநாட்டு ஆதிக்கபுரியினர் நமக்கு எதிரிகளே ஒழிய, மக்கள் அல்ல!!

*

கே: ஐயா! தி. மு. கவில் இருந்த போது கவிஞர் கண்ணதாசன் மீது ஒரு பொதுக் கூட்டத்தில் கல் வீசப்பட்ட போது அந்தக் கல்லை எடுத்து வைத்துக் கொண்டு இந்தக்கல் காங்கிரசுக்கு சமாதிகட்டும் கல் என்று பேசிய கண்ணதாசன் இன்று காங்கிரசை ஆதரிக்கிருரே, ஏன்?

எஸ். தாயுமானவன்
எடையூர் (திருச்சி)

ப: தோழரே! அவர்வசம் இப்போது ஏதாவது ஒரு கல் கிடைத்தால் சம்பத், புதிதாக வாங்கியிருக்கும் மாடிவீட்டுக்கு இன்னொரு 'காம்பவுண்டு' எழுப்பக் கொண்டு போய்க் கொடுப்பார். வேறென்றும் செய்யமாட்டார்! ஏனெனில் ஒரு நாளைக்குச் சம்பத்தையும் எதிர்க்க வேண்டுமென்ருல், அந்தக்கல் அவருக்குப் பயன் பட்டாலும் பயன்படும் பாருங்கள்!!

—○○—

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6